# உதயன்

சுடர் : 36 கதிர் : 214 | திங்கட்கிழமை | ஆனி 14 ஆம் நாள் 28 ஜூன் 2021 | வள்ளுவர் ஆண்டு 2052 | பக்கங்கள்: 20 விலை: 30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111


## கிளிநொச்சியில் விபத்து பொலிஸார் உயிரிழப்பு!

கிளிநொச்சி, ஜூன் 28

கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் பொலிஸ் அலுவலர் ஒருவர் உயிரிழந்தார். கரடிப்போக்கு சந்தியிலிருந்து பெரியபரந்தன் ஊடாக பூநகரி வீதிக்குச் செல்லும் வழியில் ஐந்தாம் வாய்க்கால் பகுதி 19

## இந்திய மீனவர்களால் வடக்கில் டெல்டா ஆபத்து

### இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 28

'மனிதனை மூச்சுத்திணற வைத்துக் கொல்லும் டெல்டா கொரோனா வைரஸ், இலங்கையில் விமான நிலையங்கள் மூலமாக மட்டுமன்றி வடபகுதியில் இந்திய மீனவர்கள் ஊடாகவும் மேலும் பரவக் 19



# அரசுக்கு எதிராக போராடுவதற்கு தமிழர்களும் ஒன்றிணைக

### எல்லே குணவங்ச தேரர் அழைப்பு

கொழும்பு, ஜூன் 28

வடக்கிலுள்ள வளங்களும் தற்போது விற்கப்பட்டு வருகின்றன. எனவே, இவற்றை தடுத்து நாட்டை மீட்பதற்கான சுதந்திர போராட்டத்துக்கு தமிழ் மக்களும் எம்முடன் ஒன்றிணைய வேண்டும் என்று அழைப்புவிடுத்துள்ளார் தேசத்தை பாதுகாக்கும் தேசிய அமைப்பின் தலைவரான எல்லே குணவங்ச தேரர் தெரிவித்தார். 19

## முல்லைத்தீவில் கொரோனாவால் ஒருவர் இறப்பு!

முல்லைத்தீவு, ஜூன் 28

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சிறுநீரக நோய்க்காக சிகிச்சை பெற்று 19

## வவுனியாவில் கொரோனாவால் ஒருவர் இறப்பு!

வவுனியா, ஜூன் 28

வவுனியாவில் கொரோனாத் தொற்றுக் காரணமாக நேற்று ஒருவர் உயிரிழந்தார். வவுனியா, தவசிகுளம் பகுதியைச் சேர்ந்த 85 வயது முதியவர் ஒருவர் 19

## கொரோனாவால் 39 பேர் சாவு

கொழும்பு, ஜூன் 28

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி மேலும் 39 பேர் உயிரிழந்தனர் என்று அரச தகவல் திணைக்களம் 19

## வடக்கில் கொரோனா 51

யாழ்ப்பாணம், ஜூன் 28

வடமாகாணத்தில் நேற்று 51 பேர் கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளப்படுத்தப்பட்டனர். 924 பேருக்கு மேற் 19



## குப்பைகளை உரமாக்கும் தொழிற்சாலை நேற்று திறப்பு

வடமராட்சி, ஜூன் 28

யாழ்ப்பாணம் வடமராட்சி, முள்ளியில் சேதனக் குப்பைகளை இயற்கை உரமாக மாற்றும் தொழிற்சாலை அமைச்சர் நாமல் ராஜபக்ச 19



## அரசியல் கைதியான ஆனந்த சுதாகரை விடுவிக்கவேண்டும்

### அவரின் பிள்ளைகள் நாமலிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 28

அரசியல் கைதியான ஆனந்த சுதாகரை விடுவிக்க வேண்டும் என்று அவரின் பிள்ளைகள் அமைச்சர் நாமல் ராஜபக்சவிடம் கோரிக்கைவிடுத்துள்ள 19

சிறையிலுள்ள ஏனைய

## அரசியல் கைதிகளை உடன் விடுவியுங்கள்!

### கைதிகளின் உறவினர்கள் நாமலிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 28

16 அரசியல் கைதிகளை விடுவித்து நடவடிக்கை எடுத்தது போல், நீண்டகாலமாக சிறையில் உள்ள ஏனைய தமிழ் அரசியல் கைதிகளையும் விடுக்க அரசு துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அமைச்சர் நாமல் ராஜபக்ச விடம் கோரிக்கை விடுத்துள்ளனர் அரசியல் கைதிகளின் உறவினர்கள். 19

## முகநூலில் பதிவிட்டவர்களை ஆணி அடித்துச் சித்திரவதை

### கண்டியில் கொடூரச் சம்பவம்

கொழும்பு, ஜூன் 28

முகநூலில் கருத்துப் பதிவிட்ட இருவர் கடத்திச்செல்லப்பட்டு, காட்டுக்குள் வைத்து சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டுள்ள கொடூரச்சம்பவமொன்று கண்டியில் இடம்பெற்றுள்ளது. இவர்கள் கண்டி மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

இவர்களை கடத்திச்சென்று, சித்திரவதைக்கு உட்படுத்தியவர்கள் தலைமறைவாகியுள்ள நிலையில் அவர்களை கைதுசெய்வதற்கான நடவடிக்கையில் பொலிஸார் தீவிரமாக இறங்கியுள்ளனர். 19


செய்திகள் மற்றும் விளம்பரங்களை உதயனில் பிரசுரிக்க....

செய்தி: 021 493 0000, 077 1209994

விளம்பரம்: 021 493 1111, 071 6182182





noolaham.org | aavanaham.org

# கடற்றொழிலிலும் வடக்கில் கால்பதித்தது சீனா
# கிளி.கௌதாரிமுனையில் கடலட்டைப் பண்ணை

## மீனவர்கள் விசனம்

**கிளிநொச்சி, ஜூன் 28**

**கிளிநொச்சி பூநகரி கௌதாரிமுனை கடற்பரப்பில் சீன நிறுவனம் ஒன்று அனுமதியின்றி கடலட்டைப் பண்ணை அமைத்து, அட்டை வளர்ப்பில் ஈடுபட்டு வருகின்றது என்று பிரதேச கடற்றொழிலாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.**





இது தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில்;

கௌதாரிமுனையில் கடற்றொழிலில் ஈடுபட்டு வருகின்ற நாம் கடலட்டை வளர்ப்பதற்கு கோரிக்கை விடுத்தும் எங்களுக்கு அதற்குரிய ஏற்பாடுகள் எதுவும் இதுவரை ஏற்படுத்திக்கொடுக்கவில்லை. இந்த நிலையில் சீன நிறுவனம் ஒன்றுஎங்களின் கடற்பரப்புக்குள் பண்ணை அமைத்து கடலட்டை வளர்ப்பில் ஈடுபட்டு வருகின்றது. குறித்த நிறுவனத்துடன் எங்களுடைய கௌதாரிமுனை கடற்றொழிலாளர் அமைப்பை ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடுமாறும் அதிகாரிகள் உள்ளிட்ட சிலர் கோரி வருகின்றனர். ஆனால் நாங்கள் கைச்சாத்திடவில்லை.

குறித்த கடலட்டைப் பண்ணை தொடர்பில் பூநகரி பிரதேச செயலகத்தில் எவ்வித அனுமதியும் பெறப்படவில்லை - என்றனர். (ப-214)

# இனத்தையும் மண்ணையும் காக்க ஒற்றுமை வலுப்பெறவேண்டும்

## செல்வம் எம்.பி. வலியுறுத்து

வவுனியா,ஜூன் 28

இனத்தையும் மண்ணையும் காப்பதற்கான ஒற்றுமை வலுவாகவேண்டும் அதற்கு தமிழீழ விடுதலை இயக்கம் எந்தவிதமான விட்டுக்கொடுப்பையும் செய்வதற்கு தயாராக உள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

ரெலோவின் ஏற்பாடுசெய்திருந்த, தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் விடயங்களை ஆராயும் தமிழ்த் தேசியக் கட்சிகளுடனான 'சூம்' செயலி'யிலான கலந்துரையாடல் தொடர்பாக விளக்கமளிக்கும் நேற்றைய ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு கிழக்கில் இலங்கை அரசு மோசமான செயற்பாட்டை முன்னெடுத்து வருகின்றது. மாகாணசபையின் அதிகாரங்களைப் பறித்து, நிலங்களை அபகரித்து பூர்வீகத்தை சிதைக்கும் செயற்பாட்டை இலங்கை அரசு முன்னெடுத்து வருகின்றது. அது எமது மக்களிடத்திலும், மண்ணிலும் ஓர் அபாயகரமான நிலைமையை ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றது.

இதற்கு நாம் தடைபோடவில்லை என்றால் நிச்சயமாக இராணுவ அடக்குமுறையினூடாக எமது தேசத்தின் வரலாற்றை சிதைக்கும் செயற்பாட்டை அவர்கள் செய்து முடிப்பார்கள்.

அதனை முறியடிக்கவேண்டும் என்றால் எங்களுக்குள் ஒற்றுமை வேண்டும். அந்த ஒற்றுமையை வலியுறுத்தி சில கட்சிகளுக்கு ஒரு கடிதத்தை அனுப்பியிருந்தோம்.



மாவை சேனாதிராசா மற்றும் சித்தார்த்தன் ஆகியோர் அதற்கு தமது ஆதரவைத் தெரிவித்திருந்தனர். சுரேஸ் பிரேமச்சந்திரன், சி.வி.விக்கினேஸ்வரன் ஆகியோர் தமது ஆர்வத்தை தெரிவித்திருந்தாலும்கூட வேறு சிலரையும் உள்வாங்கவேண்டும் என்ற கோரிக்கையையும் முன்வைத்திருக்கின்றார்கள். கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தனது பதிலை அறிவிக்கவில்லை. ஆயினும் இந்த அணியில் அவர் தொடர்ந்து செயற்படவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்கின்றேன்.

யாரை அழைப்பது என்றவிடயம் தொடர்பாக நாம் அனுப்பிய கடிதத்தில் சில தவறுகள் இருப்பதை குறிப்பிட வேண்டும். எந்தக்கட்சியைச் சார்ந்தவர்கள் என்ற விடயத்தை நாம் பார்க்கவில்லை. விடுபட்டவர்கள் அழைக்கப்படவேண்டும் என்பதில் நாம் ஆர்வமாக இருக்கிறோம். எமது இனத்தையும் மண்ணையும் காப்பதற்கான ஒற்றுமை வலுவாகவேண்டும். இந்த விடயம் பிசுபிசுத்துப் போயுள்ளது என்று சில ஊடகங்கள் தமது கருத்துக்களை சொல்கின்றன. ஆரம்பப்புள்ளியையே நாம்வைத்திருக்கின்றோம். அதில் தவறுகள் இருக்கும்.

அவற்றை திருத்திக்கொள்வோம். அதனை பெரிதுபடுத்தாது இந்த ஒற்றுமைக்கான வாய்ப்பை தரவேண்டும். கூட்ட மைப்புத்தான் செய்யவேண்டும் என்ற நோக்கத்தில் இதனை நாம் செய்யவில்லை. அத்துடன் இந்த ஒற்றுமையானது புலம்பெயர் உறவுகளோடும் தமிழ்நாட்டு மக்களோடும் பேணக்கூடிய வகையில் இருக்கவேண்டும். அந்தவகையில் யாரை அழைப்பது யாரை தவிர்ப்பது என்ற ஆலோசனையை பெறுவதற்கான கலந்துரையாடல் ஒன்றையே இன்று (நேற்று) ஏற்பாடுசெய்துள்ளோம். எனவே யாரும் விடுபடமாட்டார்கள். விடுபட்டவர்களை யும் அழைத்துக்கொண்டு மிகவிரைவிலே முழுமையான ஒரு கூட்டத்தை நடத்துவதற்கான முயற்சியை மேற்கொள்வோம்.

இது ஒரு கட்டமைப்பாக வருவதே சாலச் சிறந்ததாக இருக்கும். அதுவே காலத்தின் கட்டாயமாகவும் இருக்கிறது. நாம் சோர்ந்து போகமாட்டோம், அதற்கு என்னவிலை கொடுக்கவேண்டுமோ அதனை செயற்படுத்த தயாராக இருக்கிறோம். - என்றார்.

அரச தரப்புடன் இணைந்து செயற்படும் வடக்கைச் சேர்ந்த கட்சிகளையும் இந்த கட்டமைப்பில் உள்வாங்கி செயற்படுவீர்களா என்று ஊடகவியலாளர் கேட்டதற்கு, அரசுக்கு எதிரான நடவடிக்கைகளையே நாம்மேற்கொள்ள இருக்கிறோம். ஆகவே ஒரு வலுவான ஒற்றுமையை ஏற்படுத்தி அதன்மூலமாக அவர்களும் வரவேண்டும் என அனைவரும் கேட்டுக்கொண்டால் அதனை நாங்கள் பரிசீலிக்கத் தயார்- என்றார். (த-110)

# மாவட்டம் கடந்துசென்று தடுப்பூசி பெற்ற 425 பேர்

## பொலிஸ் விசாரணையில் தெரியவந்தது

கொழும்பு, ஜூன் 28

காலி மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் ஜூன் 5 மற்றும் 7 ஆம் திகதிகளில் அஸ்ராஜெனகா இரண்டாவது தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டவர்களில் 425 பேர், மேல் மாகாணத்தில் இருந்து சென்றுள்ளனர் என்பது தெரியவந்துள்ளது.

காலி நீதவானின் உத்தரவுக்கு அமைய, தென் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரால் காலி பொலிஸாருக்கு வழங்கப்பட்ட பெயர்ப்பட்டியல் மூலம் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

குறித்த இரு நாள்களிலும் மொத்தமாக 632 பேருக்கு அஸ்ரா +ஜெனகா தடுப்பூசி யின் இரண்டாவது டோஸ் வழங்கப்பட்டுள்ளது. தடுப்பூசியை பெற்றுக்கொண்டவர்களில் நுவரெலியாவை சேர்ந்த ஒருவரும் கண்டியை சேர்ந்த ஒருவரும் மாத்தறையை சேர்ந்த இருவரும் எல்பிட்டியவை சேர்ந்த 27 பேரும் காலியை சேர்ந்த 90 பேரும் பொலிஸ் அதிகாரிகள் 79 பேரும் அடங்குகின்றனர்.

கடந்த 5 மற்றும் 7 ஆம் திகதிகளில் கொவிஷீல்ட் தடுப்பூசியின் இரண்டாவது டோஸை பெற்றுக்கொள்வதற்காக மேல் மாகாணத்திலிருந்து பெருமளவானோர் தெற்கு அதிவேக வீதியூடாக வாகனங்களில் பயணித்துள்ளனர்.

இது தொடர்பில் கிடைத்த தகவலுக்கமைய, காலி பிராந்திய குற்றத்தடுப்பு விசாரணைப் பிரிவின் அதிகாரிகளால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன. இதன்போது, நீதிமன்றம் வழங்கிய உத்தரவுக்கு அமைய இந்த அறிக்கை பெறப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (த-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துப்பாக்கி, ரவைகளுடன் இரு இடங்களில் ஐவர் கைது



கொழும்பு, ஜூன் 28

இரத்தினபுரி, அங்குலான மற்றும் கல்கமுவ ஆகிய பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கைகளின் போது துப்பாக்கி மற்றும் கைக்குண்டுகளை தம்வசம் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் ஐவரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இவர்கள் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி, தோட்டாக்கள் மற்றும் கைக்குண்டுகளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (த-இ)

## கொழும்பு வாழ் மக்களுக்கு இரண்டாவது டோஸ் விரைவில்



கொழும்பு, ஜூன் 28

கொழும்பு மக்களுக்கு இரண்டாவது டோஸ் தடுப்பூசி செலுத்துவதற்காக 10 ஆயிரம் அஸ்ரா ஜெனகா தடுப்பூசிகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்று கொழும்பு மாநகர முதல்வர் ரோசி சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில் 70 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு அவற்றை செலுத்தவுள்ளோம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு நகர சபைக்குட்பட்ட பகுதிகளில் இதுவரையில் 2 லட்சம் பேருக்கு தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. இரண்டாவது டோஸ் செலுத்துபவர்களுக்கு குறுந்தகவல் தெரிவிக்கப்படவுள்ளது என்றும் அவ்வாறு குறுந்தகவல் அனுப்ப முடியாதவர்களுக்கு, அவர்களின் வீடுகளுக்கு சென்று அறிவிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (த-இ)



## பதவி விலகினார் உதய கம்மன்பில

கொழும்பு,ஜூன் 28

எரிவாயு விலையைத் தீர்மானிப்பது தொடர்பான அமைச்சரவை உபகுழுவின் உறுப்பினர் பதவியை, வலு சக்தி அமைச்சர் உதய கம்மன்பில இராஜினாமா செய்துள்ளார்.

எரிவாயு விலை அதிகரிப்பு தொடர்பான தீர்மானமெடுக்கும் குழுவில் பங்கேற்றால், அரசுக்குள் இருக்கும் பலரின் விமர்சனத்துக்கு உள்ளாகவேண்டிவரும் என்று கருதியே அவர் இந்த உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

அரசின் பொதுத் தீர்மானத்துக்கமைவாக, எரிபொருள் விலைகளை அதிகரித்தாலும், அரசின் உறுப்பினர்களே அதனை விமர்சனம் செய்துள்ளனர் என்றும் அவர் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

இந்த முடிவை அமைச்சர் கம்மன்பில எடுத்துள்ளமை ஆளுங்கட்சிக்குள் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ச அமைச்சராக நியமனம் பெறவுள்ளார் என்று செய்திகள் வெளிவந்துள்ள நிலையில், கம்மன்பில பதவி விலகியுள்ளார். (இ.4)

### தாய்மையடைவதற்கு வழிசெய்வதற்கான

# மூளாய் கூட்டுறவு மருத்துவமனையில் உருவாகிறது 'தாய்மை' செயற்றிட்டம்

### நிதி வழங்குமாறு கொடையாளர்களிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 28

**வடக்கு மாகாணத்தில் குழந்தைப்பேறு இல்லாத தம்பதியருக்கு மருத்துவ மற்றும் ஆலோசனைகளை வழங்குவதற்கான 'தாய்மை' கருவளச் சிகிச்சை நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதனை வெற்றிகரமாகச் செயற்படுத்தி வடக்கிலுள்ளவர்கள் பயன்பெற, நிதி உதவி வழங்குங்கள் என்று மூளாய் கூட்டுறவு மருத்துவமனை சங்கம் கோரியுள்ளது.**

இது தொடர்பில் மருத்துவமனை சங்கம் அனுப்பிய செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

இந்த நிலையம் மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் முதலாம் மாடியில் நோயாளிகளின் இரகசிய தன்மை கருதி அமையவுள்ளது.

இதில் குறிப்பிடத்தக்க விடயங்களாக,

வெளியக கருக்கட்டல் கருவள சிகிச்சைக்கான மருந்துகள், முட்டையானது பெண்ணிடம் இருந்து சேகரிக்கப்பட்டு ஆய்வுகூடத்தில் ஆணின் விந்து அணுவைக் கொண்டு கருக்கட்டப்பட்ட கருவாக வளர்க்கப்படும். இறுதியில் சத்திர சிகிச்சை கூடத்தில் கரு பெண்ணின் கருப்பையில் வைக்கப்படும். இந்தச் செயன்முறைக்கும் கருவள சிகிச்சைக்கான மருந்துகளுக்குமான செலவீனம் 7 லட்சம் ரூபாவாகும். வெளியக கருக்கட்டல் சிகிச்சைக்கு அண்ணளவாக ஏழு கிழமைகள் தேவைப்படும்.

இதைவிட, ஆணிடமிருந்து சேகரிக்கப்பட்ட விந்தணு கழுவப்பட்டு பின்னர் வீரியம்மிக்கதாக்கப்பட்டு அதன்பின்னர், பெண்ணின் கருப்பையில் பெண்ணின் முட்டை கருப்பையை அடையும்போது விந்தணு விடப்படும். இதன் செலவு 75 ஆயிரம் ரூபாவாகும். உள்ளக குழியவுரு விந்து உட்புகுத்தல் செயற்பாடானது ஆய்வு கூடத்தில் ஆணிடம் இருந்து தேர்வுசெய்யப்பட்ட விந்தணு பெண்ணின் முட்டையின் மையத்தில் உட்புகுத்தப்படும். ஏனெனில், முட்டையின் வெளிக்கவசம் மிகவும் தடிப்பானது அல்லது வன்மையானதால் விந்தணு ஊடுருவிச் செல்ல முடியாது. இது ஒரு வெளியக கருக்கட்டலுக்கு ஆதரவு அளிக்கும் மேலதிக செயன்முறை ஆகும். இதற்கான செலவீனம் 70 ஆயிரம் ரூபாவாகும்.

எவ்வாறாயினும் சாதாரண வருமானம் உடைய தம்பதியினர் ஒருவர் இந்த ஐ.வி.எப். சிகிச்சைக்குரிய செலவை சமாளித்து முகம் கொடுக்க முடியாத நிலையால், வட பகுதியில் பலர் குழந்தைகளற்ற தம்பதிகளாக காணப்படுகின்றனர். இதனைக் கருத்திற்கொண்டு 'தாய்மை' நிலையம் நிதிமூலம் ஒன்றை உருவாக்கி இந்த நிதியிலிருந்து ஒரு வருடத்துக்கு 10 தம்பதியினருக்கு கடன் வழங்கும் செயற்பாட்டை நிர்வகித்து நடைமுறைப்படுத்தவுள்ளது.

அதேவேளை, குறைந்த வருமானம் உள்ள தம்பதியினருள் ஆண்களுக்கான ஐ.யூ.ஐ. சிகிச்சைக்கான நடைமுறைக்கேனும் பணம் செலுத்த முடியாது உள்ளனர். ஆகவே மிகவும் குறைந்த சந்தர்ப்பங்களில் வருடமொன்றுக்கு குழந்தைப்பேறு அற்ற 5 தம்பதியினருக்கு இந்த நடைமுறைகளுக்கூடாக இலவசமாக சிகிச்சை வழங்கப்படும்.

இதற்காக தேவைப்படும் நிதி 10 கடன் வசதிகள் மற்றும் 5 இலவச சிகிச்சைகளுக்கு 7.35 மில்லியன் ரூபாவாகும். இதனையும் தேவையான ஏனைய நிதிமூலமான 25.5 மில்லியன் ரூபாவையும் இணைக்கும்போது 32.85 மில்லியன் ரூபா தேவைப்படும்.

எனவே, இந்த நாட்டிலிருந்து இடம்பெயர்ந்து பல்வேறு நாடுகளில் வாழும் தனித்தனியான நலன் விரும்பிகளிடமும் இலங்கையை தளமாகக்கொண்டு வாழ்கின்றவர்களிடமும் அதேபோன்று வெளிநாடுகளில் கருணையுடன் இயங்கும் தர்ம நிறுவனங்கள், ஏனைய நிறுவனங்கள் என்பவற்றிடமும் இந்தச் செயற்பாட்டைசெய்ய மூளாய் கூட்டுறவு மருத்துவமனை நிதியுதவி வேண்டி நிற்கிறது - என்றுள்ளது. (த-26)


# தொழிலுக்காக வெளிநாடு செல்வோருக்கு கொவிட் தடுப்பூசி வழங்கத் தீர்மானம்

### தொலைபேசியில் பதிவுசெய்ய அழைக்கிறது பணியகம்

கொழும்பு, ஜூன் 28

தொழிலுக்காக வெளிநாடு செல்லும் அனைவருக்கும் கொவிட் தடுப்பூசியை பெற்றுக் கொடுக்க அரசு தீர்மானித்துள்ளது என்று வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

வெளிநாடுகளுக்குச் செல்லும் தொழிலாளர்களுக்கு கொவிட் தடுப்பூசி பெற வேண்டியதன் அவசியம் குறித்து ஜனாதிபதி கவனம் செலுத்தியிருந்தார். அதனைத் தொடர்ந்து கொவிட் தடுப்பு தேசியக் குழுவின் ஒப்புதலும் பெறப்பட்டுள்ளது. வெளிநாட்டு தொழிலுக்கத் தேவையான தொழில் ஒப்பந்தம், வீசா மற்றும் தொழில் தொடர்பான நியமனக் கடிதத்தைப் பெற்றவர்கள் மட்டுமே இந்த தடுப்பூசி திட்டத்துக்கு தகுதி பெறுகின்றனர்.




அனுமதி பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையத்தின் ஊடாக வெளிநாடு செல்லவுள்ள நபர்கள் குறித்த முகவர் நிலையத்தின் ஊடாகவும், சுயமாகவும் வெளிநாடு செல்லவுள்ளவர்கள் பணியகத்துக்கு தொலைபேசி அழைப்பொன்றை மேற்கொண்டு பதிவு செய்துகொள்ள முடியும்.

தடுப்பூசி வேலைத்திட்டம் எதிர்வரும் வாரத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில், மேலதிக தகவல்களை 1989 என்ற இலக்கத்துக்கு அழைப்பதன் ஊடாக பெற்றுக்கொள்ள முடியும் - என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 43 லட்சம் மாணவர்கள் பாதிப்பு ஜனாதிபதி கண்டுகொள்கிறாரில்லை

## நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையிலும் தீர்வு இல்லை கடுமையாகச் சாடுகின்றது இலங்கை ஆசிரியர் சங்கம்

**கொழும்பு, ஜூன் 28**

**கொவிட்-19 தொற்றால் ஒன்றேகால் வருடங்களுக்கு மேலாக பாடசாலைகள் மூடப்பட்டுள்ள நிலையில், மாணவர்களின் கல்வி முற்றாக செயலிழந்துள்ளது. ஆசிரியர்கள் சுயமாக தமது நிதியைப் பயன்படுத்தி கற்பித்தலில் ஈடுபட்டு, பகுதி அளவிலேனும் கல்வியை இடைவெளியில்லாது தொடர்கின்றனர். எனினும், எவ்வித கல்விச் செயற்பாடுகளும் இன்றி சிக்கித்தவிக்கும் 43 லட்சம் மாணவர்கள் தொடர்பாக எவ்விதமான வேலைத் திட்டத்தையும் அரசு முன்னெடுக்கவில்லை. ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில்கூட இது பற்றி கூறாதது துரதிஸ்டவசமாகவுள்ளது.**

இவ்வாறு சுட்டிக்காட்டி விசனம் தெரிவித்துள்ளது. இலங்கை ஆசிரியர் சங்கம்.

இது தொடர்பில் சங்கத்தின் பொதுச் செயலர் ஜோசப் ஸ்டாலின் அனுப்பிய செய்திக் குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

60 வீதமான மாணவர்களுக்கு இணையவழி நிகழ்நிலை ஊடான கற்றல் வாய்ப்புகள் சாத்தியமற்று காணப்படுகின்றன. இவ்வாறான இக்கட்டான நிலையில் கடந்த 25 ஆம் திகதி ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் பாடசாலைகள் மூடியிருந்தாலும் தொலைதூர இணைய வழிகளின் ஊடாக நிலைபேறுடைய கல்வியை வழங்குகிறோம் எனக் குறிப்பிட்டுள்ளார். பெற்றோர், கல்விச் சமூகம், மாணவர்கள் அனைவரும் எதிர்பார்த்திருந்த, கல்வியை மீட்டு முன்னேற்றுவதற்காக அரசு முன்னெடுக்கும் திட்டம் என்ன என்று குறிப்பிடவில்லை. இது கல்விச் சமூகத்துக்கு பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

**ஜனாதிபதியின் பொய்க்கணக்கு**

மேலும் 10 ஆயிரம் பாடசாலைகளுக்கு தேவையான பைபர், ஒப்ரிகல் போன்ற நவீன வசதிகளையும் ஏற்படுத்தியுள்ளோம் என்று குறிப்பிட்டுள்ளமையானது எந்தளவு நம்பகத்தன்மை வாய்ந்தது என குறிப்பிட முடியாதுள்ளது. இலங்கையின் மொத்த பாடசாலைகள் 10 ஆயிரத்து 165. அவர் கூறிய 10 ஆயிரம் பாடசாலைகள் எங்கு அமைந்துள்ளன என்பது சர்ச்சைக்குரியதாக உள்ளது.

எது எப்படியோ, கல்வி அமைச்சின் புள்ளி விவரப்படி இணைய வீச்சு இல்லாத பாடசாலைகள், பிரதேசத்துக்கு 2 ஆயிரத்துக்கும் அதிகமாகும். நவீன தொடர்பு சாதனங்களின் ஊடாக பாடசாலைகள் புதுப்பிக்கப்பட்டிருந்தால் மாணவர்கள் மலை முகடுகளிலும், மரத்தின் மேலேயும் ஏறி ஆபத்தான சூழ்நிலையில் கல்வியைப் பெறுவதற்காக தினமும் போராட்டத்தை அனுபவிக்கும் பெற்றோருக்கு ஜனாதிபதியின் கூற்று நகைப்புக்குரிய விடயமாகக் காணப்படுகின்றது.

கொவிட் -19 தொற்றால் முழுமையாக ஸ்தம்பித்துள்ள கல்வி தொடர்பாக, போதிய தெளிவை கல்வி அதிகாரிகள் ஜனாதிபதிக்கு வழங்கவில்லை என்பது புலனாகின்றது. தினமும் பொது வெகுசன ஊடகங்களில் எடுத்துரைக்கப்படும் மாணவர்களின் அவல நிலை உரிய அதிகாரிகளை சென்றடையவில்லை போலும். இன்று கல்வியைத் தொடரும் மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள இக்கட்டான சூழலை, அரசு சிறிதும் கவனத்தில் கொள்ளவில்லை என்பது தெளிவாகின்றது. மாணவர்களின் கல்விக் கட்டமைப்பை மீளக் கட்டி எழுப்பக்கூடிய எந்த ஒரு கல்விக் கொள்கையோ திட்டங்களோ இல்லாமை துரதிஷ்டமே.

கல்வி அமைச்சர் 12வீதமான மாணவர்களுக்கே இலங்கையில் இணையவழிக் கல்வி வாய்ப்பு கிடைக்கவில்லை என குறிப்பிட்டுள்ளார். இது அரசின் இயலாமையை வெளிப்படுத்துகின்றது. ஜனாதிபதி தனது உரையில், மாணவர்களின் சீருடை, பாடப் புத்தகங்கள், போசாக்குணவு என்பவற்றுக்காக 25 பில்லியன் ஒதுக்கியுள்ளேன் என்று குறிப்பிட்டார். எனினும், 2021 ஆம் ஆண்டுகான சீருடைகள் முழுமையாக இன்னும் பகிர்ந்தளிக்கப்படவில்லை. முதலாவது கொவிட் அலையுடன் போசாக்குணவு இடைநிறுத்தப்பட்டுள்ளது என்பதுடன், பின்பு அதற்கு பதிலாக உலர் உணவுப்பொதி வழங்கப்பட்டது. மீண்டும் பாடசாலை தொடர்ச்சியாக நடைபெறவில்லை. எனினும், இந்தச் செயற்பாட்டுக்கு என்ன நடந்தது என்பது குழப்பமாக உள்ளது.

கல்விக் கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள இந்தப் பெரும் சரிவை சீர்செய்வதற்காக எவ்வித தந்திரோபாயமான நடவடிக்கைகளையும் அரசு மேற்கொள்ளாது இருப்பது நீண்ட கால பாதிப்பை மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்திவிடும். ஆயினும், அரசுக்கு எந்தவித அக்கறையும் இல்லை என்பதே இதன் ஊடாக தெளிவாகின்றது. - என்றுள்ளது. (த)

# ஐ.ம.சக்தி உறுப்பினர்களே ரணிலுக்கு முதல் வாழ்த்து

கொழும்பு.ஜூன் 28

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்ற உறுப்பினராக பதவியேற்ற பின்னர், ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களே, முதல் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர் என்று கொழும்பு சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கமவே, அவரை முதலில் வரவேற்றுள்ளார். நீங்கள் நாடாளுமன்ற உறுப்பினராக வந்திருப்பது நல்லது, நாங்கள் ஒன்றாக புதியதைச் செய்வோம் என்று வெல்கம பரிந்துரைத்துள்ளார்.

பதவியேற்புக்கு ரணில் விக்ரமசிங்க தயாரானபோது, அமைச்சரும், சபைத் தலைவரும், பாடசாலை நண்பருமான தினேஷ் குணவர்தன அவருக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளார். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவைத் தவிர அரசில் உள்ள அனைத்து கட்சித் தலைவர்களும், எதிர்க்கட்சினரும் ரணில் விக்ரமசிங்கவுக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளனர். அதேவேளை அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி, கொண்டுவந்துள்ள நம்பிக்கையில்லா தீர்மானத்தில் குமாரா வெல்கம கையெழுத்திடவில்லை என்றும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ.4)

# கைதிகளை விடுவிக்கும் அழுத்தம் தொடரட்டும்

யாழ்ப்பாணம், ஜூன் 28

விடுவிக்கப்படாதுள்ள அரசியல் கைதிகள் விடயத்தில் இன ரீதியான பாகுபாடு இன்றி ஒருமித்து செயற்படுவதன் மூலம் விரைந்து தீர்வைப் பெறலாம் என்று காரைநகர் பிரதேச சபைத் தவிசாளர் கேதீஸ்வரதாஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பில் தமிழ்த் தேசிய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் என பலரும் நாடாளுமன்றில் பல விவாதங்களையும் கருத்துரைகளையும் முன்வைத்துள்ளனர். தொடர்ந்தும் அத்தகைய கருத்துக்களை நாடாளுமன்றில் முன்வைத்து அரசுக்கு அழுத்தம் கொடுப்பதன் மூலம் சிறைகளில் எஞ்சியுள்ள கைதிகளையும் விடுவிக்கும் சாத்தியம் இந்த ஆண்டில் விரைவில் நிகழலாம். - என்றார். (த-50)

# முடக்கப்பட்ட பியர் பகுதிக்கு தேவைகளை வழங்க குழு நியமனம்

தலைமன்னார், ஜூன் 28

மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகர் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட தலைமன்னார் பியர் பகுதியில், கிராமிய கொரோனா பாதுகாப்புக் குழு ஒன்று நியமிக்கப்பட்டு, மன்னார் பிரதேச செயலர் எம்.பிரதீப் தலைமையில் கலந்துரையாடலும் நடைபெற்றுள்ளது.

கொரோனா காரணமாக முடக்கப்பட்டிருக்கும் இரு கிராம அலுவலர் பிரிவுகளிலுள்ள மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய தேவைகளை முன்னெடுத்துச் செல்வதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ள இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

மன்னார் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட தலைமன்னார் பியர் கிழக்கு மற்றும் தலைமன்னார் பியர் மேற்கு ஆகிய இரு கிராம அலுவலர் பிரிவுகளில் கடந்த வாரம் கொரோனாத் தொற்றாளர்கள் 62 பேர் இனங்காணப்பட்டனர்.



அதனையடுத்து கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் இவ்விரு கிராம அலுவலகர் பிரிவுகளும் காலவரையின்றி தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

இதன் காரணமாக தலைமன்னார் பியர் கிழக்கில் 626 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 305 நபர்களும், தலைமன்னார் பியர் மேற்கில் 21 குடும்பங்களைச் சேர்ந்த 52 நபர்களுமாக 647 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 357 நபர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இவர்களுக்கென அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்று வதற்கான நடவடிக்கையாக மேற்குறித்த குழு நியமிக்கப்பட் டது.

தவிர, தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்கள் அனைத்துக்கும் அரசால் வழங்கப்படும் 5 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப்பொதிகள் இன்று திங்கட்கிழமை தொடக்கம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த பகுதிகளில் அத்தியாவசிய தேவைகள் மேற்கொள்ளப்பட வேண்டிய அவசியம் ஏற்படின் இதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழுக்கள் தெரிவிக்கும் பட்சத்தில் அதற்கான நடவடிக்கைகள் உடன் மேற்கொள்ளப்படும். - என்று அங்கு நடைபெற்ற கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (த-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திஸ்ஸமஹாராம வாவியின் புனரமைப்பு இடைநிறுத்தம்



கொழும்பு,ஜுன் 28

**சீனா மற்றும் இலங்கை கூட்டு நிறுவனம் இணைந்து திஸ்ஸமஹாராம வாவியில் முன்னெடுக்கும், சேற்று மண்ணை அகற்றும் நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன.**

குறித்த நிறுவனம் அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளும் வரை புனரமைப்புப் பணிகளைத் தொடர முடியாது என்று தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் அனுர மனதுங்க தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் தொல்பொருள் திணைக்களம் மதிப்பீடு செய்து, வாவிக்கு ஏற்படும் பாதிப்பு தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்கும். அதன் பின்னர் பணிகளை முன்னெடுப்பதா அல்லது மாற்று நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை வழங்குவதா என்று தொல்பொருள் திணைக்களம் உத்தேசிக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ.4)



# பால்மா, கோதுமை மா விலை அதிகரிக்கப்படா

கொழும்பு,ஜுன் 28

பால்மா மற்றும் கோதுமை மா ஆகியவற்றின் விலையை அதிகரிக்க இதுவரை எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை என்று இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்துள்ளார்.

எனவே இவற்றை பொதுமக்களுக்கு தற்போதுள்ள விலையில் விற்பனைசெய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. சில நிறுவனங்களுக்கு சலுகைகளும் வழங்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (4)



# நாடு திரும்பிய 24 பேருக்கு கொரோனா

கொழும்பு,ஜுன் 28

வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்பியவர்களில் 24 பேருக்கு நேற்றுமுன்தினம் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதற்கமைவாக கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 2 லட்சத்து 51 ஆயிரத்து 751 ஆக அதிகரித்துள்ளது. அத்துடன், மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 32 ஆயிரத்து 49 ஆக உயர்வடைந்துள்ளது என்றும் அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஒ.4)

# தேசியத்துக்கு முரணாக செயற்படுகின்றது அரசு

## ஆனந்த தேரர் மீண்டும் பாய்ச்சல்

கொழும்பு,ஜுன் 28

தேசியத்துக்கு முரணாகவே அரசு செயற்படுகின்றது என்று அபயராம விகாரையின் விகாராதிபதி முருந்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார். அபயராம விகாரையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அரசு பதவிக்காலத்தை நிறைவு செய்வதற்கு முன்னர் வானில் தோன்றும் சூரியனையும், நிலவையும் கூட விட்டு வைக்குமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. தேசிய வளங்கள் பிற நாட்டவர்களுக்கு விற்கப்படுவதை அவதானிக்க முடிகிறது.

எனவே அரசு தவறைத் திருத்தி, சிறந்த முறையில் செயற்பட வேண்டும். இல்லாவிடின் மகா சங்கத்தினரை ஒன்றிணைத்து அரசுக்கு எதிராக வீதியில் இறங்கி போராடுவோம்- என்றார். (4)

# வன்னியின் கண்ணீரால் 45 குடும்பங்களுக்கு உதவி

முல்லைத்தீவு, ஜுன் 28

வன்னியின் கண்ணீர் அமைப்பு ஊடாக முள்ளியவளை புதறிகுடா கிராமத்தில் பொருண்மியம் நலிவடைந்த 45 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

நாட்டில் பயணத்தடை காரணமாகபுதறிகுடா கிராமத்தில் தொழில் முடக்கத்தில் உள்ள 75 குடும்பங்களுக்கு ஆஸ்திரேலியாவில் உள்ள புலம் பெயர் தமிழர்களின் ஏற்பாட்டில் வன்னியின் கண்ணீர் அமைப்பு ஊடாக முதற்கட்ட உதவிகள் வழங்கப்பட்ட நிலையில், இரண்டாம் கட்டமாக 45 குடும்பங்களுக்கு நேற்று உதவிகள் வழங்கப்பட்டன. தலா 2 ஆயிரத்து 300 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் இவ்வாறு வழங்கப்பட்டன. (ப-19)

# குருதிக்கொடையாளர்களை இணைக்கும் திட்டம் நிறைவு

யாழ்ப்பாணம், ஜுன் 28

யாழ்ப்பாணம் கீரிமலை, கருகம்பனை 'விழுதுகள் அனைத்தும் விருட்சமே' அமைப்பின் ஆயிரம் குருதிக்கொடையாளர்களை இணைக்கும் இறுதித்திட்டம் நேற்று நிறைவடைந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.



கடந்த 18 மாதங்களாக யாழ்ப்பாண மாவட்டத்தில் ஏற்பட்ட குருதித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் முகமாக மேற்படி குருதிக் கொடையாளர்களை இணைக்கும் திட்டம் யாழ்ப்பாண மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் முன்னெடுக்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் இறுதி நிகழ்வு கீரிமலை, கருகம்பனை பொதுமண்டபத்தில் நடை பெற்றது.

மேற்படி அமைப்பானது 17 இடங்களில் குருதிக்கொடை முகாம்களை நடத்தி இந்தத்திட்டத்தின் இலக்கை நேற்று நிறைவு செய்துகொண்டது என்று தெரிவிக்கப்பட்டது. (த-20)



# நாமலுக்கு பாராட்டு

கொழும்பு,ஜுன் 28

தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பில், அமைச்சர் நாமல் ராஜபக்ச, நாடாளுமன்றில் முன்வைத்த யோசனைக்கு, யாழ்ப்பாணம் மறை மாவட்ட ஆயர் ஜஸ்டின் ஞானப்பிரகாசம் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பி. பாலசுந்தரம்பிள்ளை ஆகியோர் பாராட்டுகளைத் தெரிவித்துள்ளனர்.

தமிழ் கைதிகளை விடுவிப்பதற்கான அரசின் நடவடிக்கை பாராட்டுக்குரியது. ஏனைய தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கும் அரசு முயற்சி எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (ஒ.4)



# சாவு தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்றுவது தொடர்பில் அரசு ஆராய்வு

கொழும்பு,ஜுன் 28

சாவுத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள 253 கைதிகளை, ஆயுள் தண்டனைக் கைதிகளாக மாற்றுவதற்குப் பரிசீலிக்கப்படுகின்றது என்று சிறைச்சீர்திருத்த இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த தெரிவித்துள்ளார். இது தொடர்பான அறிக்கை நீதி அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதில் சாவுத் தண்டனைக் கைதிகளுக்கு ஆயுள் தண்டனை விதிக்க யோசனை முன்வைத்துள்ளோம்.

ஒரு கைதி சமூகத்தில் மீண்டும் ஒன்றிணைக்கப்படும்போது, அவரை சமூகத்துக்காக உழைக்கக்கூடிய ஒரு நல்ல குடிமகனாக மாற்றுவதே இதன் நோக்கம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதத் தடைச்சட்டம் சிங்களவர் மீதும் பாயலாம்

## கூட்டமைப்பு எச்சரிக்கை

கொழும்பு,ஜூன் 28

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் ஊடாக பெருந்தொகையான தமிழர்கள் கைதுசெய்யப்பட்டிருந்தனர். ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல்களின் பின்னர் முஸ்லிம்களும் கைது செய்யப்பட்டு வருகின்றனர். எதிர்வரும் காலங்களில் இந்தச் சட்டத்தை பயன்படுத்தி, சிங்களவர்களும் கைது செய்யப்படலாம். அதனால் இலங்கையர்கள் என்ற வகையில் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

சர்வதேச சித்திரவதைகளால் பாதிக்கப்பட்டவர்கள் தினத்தை முன்னிட்டு, வெலிக்கடை சிறைச்சாலைகள் தலைமையகத்தின் முன்னால் அடையாள போராட்டமொன்று மேற்கொள்ளப்பட்டது. இதில் கலந்து கொண்டு ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பல வருடங்களாக சிறைச்சாலைக்ளில் பலர் ந்து வைக்கப்பட்டுள்ளனர். விளக்கமறியலில் வைககப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் பலர் கொல்லப்பட்டுள்ளனர். அதற்கமைய அரச காலத்தில் குற்றவாளிகளுக்கு வழங்கப்பட்ட தண்டனைகள் தற்போதைய சூழ்நிலைக்குப் பொருத்தமாக இருக்குமா? என்பது தொடர்பில் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

தமிழ் அரசியல் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கியமை தொடர்பில் மகிழ்ச்சி அடைந்தாலும், அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய்யுமாறே நாம் கோரிக்கை விடுத்திருந்தோம். எனவே எஞ்சிய அரசியல் கைதிகளையும் விடுதலைசெய்ய வேண்டும். அரசியல் கைதிகள் என்போர் தனிப்பட்ட தேவைக்காக எந்தவொரு குற்றச் செயற்பாடுகளையும் திட்டமிட்டுச் செய்தவர்கள் அல்ல. முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரை கொலை செய்துவிட்டு, அதற்காக தூக்குத் தண்டனை வழங்கப்பட்டு சிறை வைக்கப்பட்டிருந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கியுள்ளார். முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் தூக்குத் தண்டனை கைதியொருவருக்கு பொது மன்னிப்பு வழங்கியிருந்தார்.

பொது மன்னிப்பு பெற்றுக் கொள்வதற்கும் தனவந்தர்களாக இருக்க வேண்டுமா? பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் அண்மையில் அண்ணளவாக 100 பேர் வரை கைதுசெய்யப்பட்டுள்ளனர். தமிழ் மக்களுக்கு எதிராக அடக்குமுறைகளை மேற்கொள்ளும் நோக்கத்திலேயே பயங்கரவாத தடைச்சட்டம் கொண்டுவரப்பட்டிருந்தது.

ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகையை வழங்குவதற்கு முடியாது என்று ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்ததன் பின்னர் சிறைவைக்கப்பட்டிருந்த குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர மற்றும் தமிழ் அரசியல் கைதிகள் ஆகியோர் விடுதலைச் செய்யப்படுகின்றனர். இலங்கை ஜனநாயக கொள்கையை பின்பற்றும் நாடுகளுடன் நட்புறவை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அதற்கு மாறாக ஜனநாயக கொள்கைகளைப் பின்பற்றாத நாடுகளுடன் நட்புறவை பேணி வருகின்றது. அதன் காரணமாகவே இதுபோன்ற நிலைமைகள் ஏற்படுகின்றன. என்றார். (ஒ.4)

# சீரமைக்கப்பட்டு 5 ஆண்டுகளில் அக்கராயனில் இரு வீதிகள் சேதம்

## மக்கள் சுட்டிக்காட்டு

**கிளிநொச்சி, ஜூன் 28**

**கிளிநொச்சி அக்கராயனில் சீரமைக்கப்பட்ட இரு வீதிகள் ஐந்தாண்டுகளில் சேதமடைந்துள்ளன என்று மக்கள் சுட்டிக்காட்டினர்.**



இது தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில்,

கடந்த 2012ஆம் ஆண்டில் வீதி அபிவிருத்தித் திணைக்களத்தால் அக்கராயன் பிள்ளையார் கோவிலில் இருந்து கோணாவில் மகா வித்தியாலயம் வரையான வீதியும், அக்கராயன் பிரதேச மருத்துவமனையில் இருந்து ஸ்கந்தபுரம் கரும்புத் தோட்டம் வயல் வரையான வீதியும் சீரமைக்கப்பட்டு, கடந்த நல்லாட்சிக் காலத்தில் கொழும்பில் இருந்து வந்த முக்கிய அரசியல் தலைவர்களால்

திறக்கப்பட்டன. தற்போது அக்கராயனில் இருந்து ஸ்கந்தபுரம் கரும்புத் தோட்ட வயல்வெளி வரை நீண்டுசெல்லும் வீதி பல இடங்களில் சேதமடைந்து காணப்படுகின்றது. அக்கராயன் பிரதேச மருத்துவமனையில் இருந்து ஸ்கந்தபுரம் நாகதம்பிரான் ஆலயத்துக்கு இடையில் மூன்றுக்கு மேற்பட்ட இடங்களில் வீதி சேதமடையத் தொடங்கி உள்ளது. இவ் வீதிகளுக்கு தரமற்ற வெண்களி பயன்படுத்தப்பட்டதாலேயே அவை சேதமடைந்துள்ளன என்று கூறப்படுகின்றது. தரமற்ற வெண்களி பயன்படுத்தப்பட்டதற்கான ஆதாரமாக தற்போது சேதமடையத் தொடங்கியுள்ள வீதியே சாட்சியாக உள்ளது.

இது தொடர்பாக மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு மற்றும் கிளிநொச்சி மாவட்டச் செயலகம் ஆகியவை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர். இதேவேளை அக்கராயன் பிள்ளையார் கோவிலில் இருந்து கோணாவில் செல்லும் வீதியில் இவ்வாறான சேதங்கள் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ப-13)



# கள்ளப்பாட்டில் வாள்வெட்டு வாகனங்கள் மீது தீ வைப்பு

முல்லைத்தீவு, ஜூன் 27

முல்லைத்தீவு கள்ளப்பாட்டுப்பகுதியில் வீடு புகுந்த கும்பல் ஒன்று அங்கிருந்தவர்கள் மீது வாளால் வெட்டியுள்ளதுடன் வீட்டில் இருந்த வாகனத்துக்கும் தீ வைத்துள்ளது.

வாள்வெட்டில் காயமடைந்த ஒருவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதுடன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ம-19)

# தடுப்பூசித் திட்டத்தில் மருத்துவ அதிகாரிகள்

கொழும்பு,ஜூன் 28

தடுப்பூசி வழங்கல் செயற்றிட்டத்தைப் பொறுப்பேற்று உரியவாறு முன்னெடுத்துச் செல்வதற்கு, அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தீர்மானித்துள்ளது என்று சங்கத்தின் செயற்குழு மற்றும் ஊடகக்குழு உறுப்பினர் மருத்துவர் வாசன் ரட்ணசிங்கம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொவிட் -19 தடுப்பு செயலணிக்கூட்டத்தின் போது தடுப்பூசி வழங்கல் செயற்றிட்டம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. இதன்போது தடுப்பூசி வழங்கல் நடைமுறையானது செயற்றிறனற்றதாக உள்ளது என்று ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். அதனால் நாம் தடுப்பூசி வழங்கல் நடவடிக்கைகளைப் பொறுப்பேற்று முன்னெடுத்துச்செல்வதற்குத் தீர்மானித்துள்ளோம். சுகாதார சேவைகள் பணிப்பாளருடன் இணைந்து அதற்கான செயற்றிட்டத்தைத் தயாரித்துள்ளோம்.

அதற்கமைவாக நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து தேசிய மருத்துவமனைகள், போதனா மருத்துவமனைகள், மாவட்ட பொது மருத்துவமனைகள் மற்றும் ஆதார மருத்துவமனைகள் ஆகியவற்றில் தடுப்பூசி வழங்கல் மையமொன்று தொழிற்படும். வாரநாள்களில் காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரையும், சனிக்கிழமைகளில் காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணி வரையும் இந்த மையம் இயங்கும். அதனூடாகப் பொது மக்களுக்கு தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் உரியவாறு முன்னெடுக்கப்படும். கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தல் உயர்வாகக் காணப்படும் 60 வயதுக்கு மேற்பட்டோர் மற்றும் தொற்றாநோய்களால் பாதிக்கப்பட்டோருக்கு தடுப்பூசி செலுத்துதல் நடைமுறையின் போது முன்னுரிமை வழங்கப்படும். அதேவேளை ஏற்கனவே தொழிற்பட்டுவரும் சுகாதாரப்பணிமனையின் தடுப்பூசி மையங்கள் வழமைபோன்று தொழிற்படும். அவற்றுக்கு மேலதிகமாகவே எமது செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படும். இதன்மூலம் நாளொன்றில் சுமார் ஒன்றரை லட்சம் பேருக்கு தடுப்பூசிகளை செலுத்த எதிர்பார்த்துள்ளோம். என்றார். (ஒ.4)

# கொரோனாத் தொற்று அபாயம் நீங்கவில்லை

## ஒத்துழைப்பு அவசியம் என்கிறார் மருத்துவ நிபுணர்

கொழும்பு,ஜூன் 28

கொரோனாத் தொற்று அபாய கட்டத்தில் இருந்து நாடு இன்னும் மீட்சிபெறவில்லை. கொரோனா வைரஸ்க்கள் திரிபடைந்து சமூகத்தில் பரவாது என்றும் கூற முடியாது. எனவே மக்கள் தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவ நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தியாவைப் போன்று அபாயம் மிக்க நிலைமை இன்னும் இலங்கைக்கு ஏற்படவில்லை. ஆனால் நாம் கவனவீனமாகச் செயற்பட்டால் அவ்வாறான நிலைமை ஏற்படக்கூடிய வாய்ப்பு உள்ளது. டெல்டா அல்லது வேறு எந்தவொரு வைரஸாகக் காணப்பட்டாலும், சகல தொற்றாளர்களின் மாதிரிகளிலும் மரபணு பரிசோதனையை முன்னெடுப்பது நடைமுறைச் சாத்தியமற்றதாகும்.

எனவே எதிர்காலத்தில் டெல்டா அல்லது வேறு நிலைமாறிய வைரஸ் தொற்றாளர்கள் இனங்காணப்படமாட்டார்கள் என்று கூற முடியாது. வைரஸ் பரவலுக்கான இடமளிக்கப்பட்டால் மாத்திரமே அது தீவிரமாகப் பரவும். அதற்கான இடமளிக்கப்படாவிட்டால் வைரஸ் பரவாது. எனவே . சுகாதார வழிகாட்டல்களை முறையாகப் பின்பற்ற வேண்டும். என்றார். (ஒ.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்




## கானமயிலும் வான்கோழியும்!

கானமயிலாடக் கண்ட வான்கோழியின் கதையாகி விட்டது ஜனாதிபதி கோத்தாபயவின் விசேட உரை. 2009க்கு முன்னர் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் நவம்பர் 27ஆம் திகதி நிகழ்த்தும் மாவீரர் தின உரைக்காக உலகமே காத்துக் கிடக்கும். இதுவரை காலமும் தங்களுடைய அமைப்பின் சாதனைகளைப் பட்டியலிட்டு, பின்னர் எதிர்காலத்தில் தம்முடைய நகர்வுகள் எப்படி இருக்கும் என்று அந்த உரையில் புலிகளின் தலைவர் நேரடியாகவோ சூசகமாகவோ உணர்த்தி நிற்பார். அந்த உரைக்கு எல்லா ஊடகங்களுமே முக்கியத்து வம் கொடுக்கும், மக்களும் அவ்வாறே. இதேபோன்று தானும் நாட்டு மக்களுக்கு விசேட உரை ஒன்றை வருடத்தில் ஒருமுறையேனும் நிகழ்த்த வேண்டும் என்பது ஜனாதிபதி கோத்தாபயவின் ஆசைபோலும். ஆனால் வான்கோழிகள் கானமயிலாகிவிட முடியாதே.

கடந்த வருடமும் கொரோனாப் பெருந்தொற்று இலங்கைக்குள் ஊடுருவி முடக்க நிலைக்குள் நாடு கொண்டு வரப்பட்ட போதும், ஜனாதிபதி கோத்தாபய விசேட உரையாற்றப்போகிறார் என அறிவிப்புக்கள் வெளியாகின. மக்களும் ஏதோ மிக முக்கியமான அறிவிப்பு ஒன்றை ஜனாதிபதி விடுக்கவுள்ளார் என்ற எதிர்பார்ப்போடு அந்த உரையைக் கேட்கத் தயாராகினர். ஆனால் கொரோனா பற்றி எச்சரித்துவிட்டு, மீன் ரின், சீனி உள்ளிட்ட சில பொருள்களின் விலைக்குறைப்பை மட்டும் அறிவித்தபடி அந்த உரையைச் 'சப்'பென்று முடித்திருந்தார் ஜனாதிபதி. ஆனால் விலைக்குறைப்புச் செய்யப்பட்டன என ஜனாதிபதியால் அறிவிக்கப்பட்ட பொருள்கள் எல்லாமே அடுத்தநாள்முதல் கடைகளில் காணாமல் போயின. சிவனே என்று தன்பாட்டுக்கு இருந்த வர்த்தகர்களை பதுக்கல்காரர்களாக மாற்றி, அவர்கள் கறுப்புச் சந்தையில் கொள்ளை இலாபம் அடிக்க வைத்ததைத் தவிர அந்த விசேட உரை வேறெதனையும் செய்யவில்லை.

நல்லமாட்டுக்கு ஒரு சூடு என்பார்கள். ஆனால் பின்னரும் ஜனாதிபதிக்கு அந்த விசேட உரை ஆசை விட்டுப் போகவில்லை. இம்முறை முன்னரே எழுதி, மனப்பாடம் செய்து, தப்பித் தவறி மறந்தாலும் நினைவூட்ட உரையின் வரிகளை முன்னால் ஒரு திரையில் அசைய விட்டு, விகாரையொன்றின் பின்னணியில் பெருமெடுப்பில் ஒளிப்பதிவு செய்து, செம்மையாக்கி இம்முறை ஜனாதிபதியின் விசேட உரை கடந்த வெள்ளிக்கிழமை இரவு 8.30க்கு ஒளிபரப்பானது. இந்த உரை சகல இலத்திரனியல் ஊடகங்களிலும் ஒளிபரப்பான சமநேரத்தில் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ பேஸ்புக் பக்கத்திலும் நேரலையாக ஒளிபரப்புச் செய்யப்பட்டிருந்தது. அந்த நேரலையைக் கண்ணுற்றவர்களில் பெரும்பான்மையானோர் ஜனாதிபதியின் உரையைக் கேட்டு, 'கெக்கே பிக்கே' என்று சகட்டு மேனிக்கு சிரிக்கும் 'இமோஜியை' (குறியீட்டை) தெறிக்க விட்டிருந்தார்கள். இன்னும் சிலரோ 'அஜித் படத்தின் அப்டேட் சொல்லுங்கள்' என்று கருத்திட்டு கலாய்த்திருந்தார்கள். ஆக மொத்தத்தில் ஜனாதிபதியின் உரையை எவருமே ஒரு பொருட்டாக கருதவேயில்லை. அப்படிப் பொருட்படுத்தும் வகையில் அவரும் எதுவும் சொல்லவில்லை. கடந்த காலங்களில் என்னவெல்லாம் ராஜபக்சக்கள் சொல்லி வருகிறார்களோ அந்தப் புளித்த மாவைத்தான் 69 நிமிடங்கள் (தனக்கு வாக்களித்த 69 லட்சம் பேரை நினைவு படுத்தவே குறீயிடாக இந்த 69 நிமிடங்களாம்) நீடித்த இந்த விசேட உரையிலும் கோத்தாபய சொல்லிச் சென்றிருந்தார்.

கோத்தாபய பற்றிய விம்பம் இவ்வளவு துரிதமாக மக்களிடம் கூனிக்குறுகும் என்று எவரும் எதிர்பார்த்திருக்கவில்லை. எப்படி 'மன் கி பாத்' என்று பெயரிடப்பட்ட விசேட உரை மூலம், இருக்கின்ற மதிப்பையும் இழந்து வருகின்ற இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி போல, இலங்கை ஜனாதிபதியும் தன்னுடைய வாயாலேயே கெடுகின்ற நுணலாக மாறிவிட்டார். இலங்கையின் வரலாற்றில் கோமாளி ஜனாதிபதியாக கருதப்பட்ட மைத்திரிபாலவை விடவும் கேலிக்குரியவராக கோத்தாபய மாறிவிட்டதையும், அவரிடம் நிர்வாகத்திறனோ மக்கள் நலன் சார்ந்த தொலைநோக்கான திட்டங்களோ எதுவுமில்லை என்பதையும் அவரது 'எதுவுமேயில்லாத' உரை அப்பட்டமாக்கியிருக்கிறது.




### பயங்கரவாதத் தடைச்சட்ட
# புதிய நடைமுறைகளை உடனடியாக நிறுத்துக
### சர்வதேச மன்னிப்புச்சபை இலங்கைக்கு அழுத்தம்

**கொழும்பு, ஜூன் 28**

**பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழான புதிய நடைமுறைகளை, இலங்கை அரசு உடனடியாக நிறுத்த வேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச்சபை வலியுறுத்தியுள்ளது.**

சித்திரவதைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கான தினத்தை முன்னிட்டு சர்வதேச மன்னிப்புச்சபையால், அதன் உத்தியோகபூர்வ ருவிற்றர் பக்கத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் அல்லது அவசரகால நிலையின்போது கைதுசெய்யப்பட்டவர்களை புனர்வாழ்வுக்கு உட்படுத்துதல் தொடர்பில் இலங்கை அரசால் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழான புதிய நடைமுறைகள் வெளியிடப்பட்டன. அந்த நடைமுறைகள் உடனடியாக இடைநிறுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்துகின்றோம். நடைமுறைகளைப் பொறுத்தமட்டில், புனர்வாழ்வளித்தல் நிலையங்களில் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றாலும், அவற்றுக்கு எதிரான பாதுகாப்பு உறுதிசெய்யப்படவில்லை. அதுமாத்திரமன்றி கடந்த காலங்களில் இடம்பெற்ற மனித உரிமை மீறல் சம்பவங்களுடன் தொடர்புபட்டவர்கள் என்று ஐக்கிய நாடுகள் சபையால் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள், இந்த நடைமுறைகளை நிறைவேற்றும் அதிகாரமையத்துடன் நெருங்கிய தொடர்பிலிருப்பதும் விசனத்தை ஏற்படுத்துகின்றது.

இவ்வாறான புனர்வாழ்வளித்தல் நிலையங்கள் கடந்த காலங்களில் எவ்வாறு இயங்கின என்பதையும், அங்கு பாலியல் வன்முறைகள் மற்றும் பாலினப் பாகுபாடுகள் உள்ளடங்கலாக எந்தளவுக்கு மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றன என்பதையும் நாம் ஏற்கனவே சுட்டிக்காட்டியிருக்கின்றோம் - என்றுள்ளது. (ஒ.4)

## பயங்கரவாதத் தடைச்சட்டம்: மீளாய்வுக்கு உபகுழு தெரிவு

கொழும்பு,ஜூன் 28

நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்பில் மீளாய்வுசெய்வதற்கான, அமைச்சரவை உபகுழுவுக்கு, இந்த வார இறுதிக்குள் உறுப்பினர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை மீளாய்வு செய்வதற்கு, அமைச்சரவை உபகுழுவொன்றை ஸ்தாபிப்பதற்கான அமைச்சரவை அனுமதிப்பத்திரம் கடந்த அமைச்சரவைக் கூட்டத் தொடரில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

பாதுகாப்பு அமைச்சர் என்ற அடிப்படையில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, நீதி அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி மற்றும் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன ஆகியோர் கூட்டாக இந்த அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்திருந்தனர்.

அதற்கமைவாக உபகுழுவுக்கான உறுப்பினர்களை ஜனாதிபதி கோத்தாபய தெரிவு செய்யவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ.4)

## மூன்றாவது நாளாகவும் தொடர்கிறது போராட்டம்

வெலிக்கடை மற்றும் மஹர சிறைகளில் உள்ள கைதிகள் மூன்றாவது நாளாக நேற்றும் சிறைச்சாலைகளின் கூரைகளில் ஏறி உணவுத் தவிர்ப்பு போராட்டத்தை தொடர்கின்றனர் என்று சிறைச்சாலைகளின் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

கைதிகள் நேற்று (நேற்றுமுன்தினம்) போராட்டத்தை கைவிட்டுள்ளோம் என்று அறிவித்தனர், ஆனால் அவர்கள் இன்று (நேற்று) அதை மீண்டும் ஆரம்பித்துள்ளனர் என்று ஏக்கநாயக்க குறிப்பிட்டார். நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் துமிந்த சில்வாவை ஜனாதிபதி பொது மன்னிப்பின் கீழ் விடுவித்திருந்தார். அதனையடுத்து இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

கைதிகள் தமது தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்றக் கோரி கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் உணவுத் தவிர்ப்பை ஆரம்பித்தனர். இந்தநிலையில் கைதிகள் தங்கள் காலை உணவை இன்று (நேற்று) ஏற்கவில்லை என்று சந்தன ஏக்கநாயக்க மேலும் தெரிவித்தார். (த-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹிந்த ராஜபக்சவால் நாட்டுக்கு கடன் சுமை

## ஐ.ம.ச. ஆதாரத்துடன் தெரிவிப்பு



**கொழும்பு,ஜூன் 28**
**பிரதமர் மஹிந்த ராஜபக்சவாலேயே இலங்கைக்கு கடன் சுமை ஏற்பட்டுள்ளது. பெருந்தொகை கடன்பெற்று அமைக்கப்பட்ட தாமரைக் கோபுரத்தில் இரவு வேளையில் மின் விளக்குகள் ஒளிரவிடப்படுகின்றன. அதனால் வேறு எந்தப் பயனோ, வருமானமோ இல்லை.**

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

போர் நிறைவடைந்த பின்னர் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் வெளிநாட்டுக் கடன்களைப் பெற்று பல அபிவிருத்திகள் முன்னெடுக்கப்பட்டன. அதனை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். 2012 ஆம் ஆண்டு பொருளாதார வளர்ச்சி வேகம் 9.1 வீதமாகக் காணப்பட்டது. ஆனால் 2013 ஆம் ஆண்டு 3 வீதமாகவும் , 2015 ஆம் ஆண்டில் 5 வீதமாகவும் குறைவடைந்தது.

2010 ஆம் ஆண்டு வெளிநாட்டுக் கடன் 21.4 பில்லியன் பொலராகக் காணப்பட்டது. ஆனால் 2014 ஆம் ஆண்டில் 42.9 வீதமாக வெளிநாட்டுக் கடன்கள் அதிகரித்தன. நூற்றுக்கு நூறு வீதம் மஹிந்த ராஜபக்ச ஆட்சிக்காலத்தில் வெளிநாட்டுக் கடன் அதிகரிக்கப்பட்டது. 2019 ஆம் ஆண்டில் கடன் சுமை 13 ஆயிரம் பில்லியனாகக் காணப்பட்டது. 2015 ஆம் ஆண்டில் நாம் ஆட்சியைப் பொறுப்பேற்கும்போது 7 ஆயிரத்து 400 பில்லியன் ரூபாவாகவே காணப்பட்டது.

அதற்கமைய எமது ஆட்சிக் காலத்தில் கடன்சுமை 5 ஆயிரத்து 600 பில்லியனாக அதிகரித்தது. இது நல்லாட்சி அரசின் 4 வருடங்களுக்கான கடன் சுமை அதிகரிப்பாகும். ஆனால் தற்போதைய அரசு ஆட்சிக்கு வந்ததன் பின்னர் கடந்த 12 மாதங்களில் கடன் சுமையானது 2 ஆயிரத்து 89 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது.

எமது ஆட்சிக் காலங்களில் அதாவது சுமார் 60 மாதங்களில் 560 பில்லியன் ரூபாவால் அதிகரித்திருந்த கடன் சுமை, தற்போதைய அரசில் 12 மாதங்களில் 2 ஆயிரத்து 89 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது. 2019 ஆம் ஆண்டு ஆடைத் தொழிற்சாலை ஏற்றுமதி வருமானம் 5.5 பில்லியன் டொலராகக் காணப்பட்டது. எனினும் 2020 ஆம் ஆண்டில் ஏற்றுமதி வருமானம் 4.4 பில்லியன் டொலராகக் குறைவடைந்துள்ளது. 2019 ஆம் ஆண்டில் துணி இறக்குமதிச் செலவு 2.9 பில்லியன் டொலராகும். ஆனால் 2020 ஆம் ஆண்டில் இந்தச் செலவு 2.3 பில்லியன் டொலராகக் குறைவடைந்தது. அவ்வாறெனில் 574 மில்லியன் டொலர் சேமிக்கப்பட்டுள்ளது.

2014 ஆம் ஆண்டில் பாடசாலை மாணவர்களுக்கான போஷாக்கு உணவுத் திட்டத்துக்கு 3.7 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால் 2019 ஆம் ஆண்டில் இதனை நாம் 5 பில்லியன் ரூபாவாக அதிகரித்தோம். எனினும் 2020 ஆம் ஆண்டில் மீண்டும் 2.2 பில்லின் ரூபாவாகக் குறைவடைந்துள்ளது. இதே போன்று பாடப் புத்தங்களுக்கு 2014 ஆம் ஆண்டில் 2.4 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. நல்லாட்சி அரசில் 4.6 பில்லியன் ரூபாவாக அதிகரிக்கப்பட்டது. காப்புறுதிக்காக எமது ஆட்சியில் 1.8 பில்லியன் ரூபாவும், கர்ப்பிணிகளுக்கான நிவாரணப் பொதிக்காக 5.2 பில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டது. இவற்றுக்காக உங்களது அரசில் ஒரு சதமேனும் ஒதுக்கப்படவில்லை.

ஆனால் அடுத்த மாதம் ஒரு பில்லியன் டொலர் கடன் மீளச் செலுத்த வேண்டியுள்ளது. இந்தக் கடன் அனைத்தும் நல்லாட்சி அரசு பெற்றுக் கொண்டதல்ல. உங்கள் சகோதரர் மஹிந்த ராஜபக்ச பெற்ற கடன் ஆகும். இவ்வாண்டு மே மாதம் முதல் 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் வரை 7 ஆயிரத்து 318 மில்லியன் டொலர் கடனை மீளச் செலுத்த வேண்டியுள்ளது. ஆனால் தற்போது அரசிடம் 4 ஆயிரத்து 18 பில்லியன் டொலர் மாத்திரமே கையிருப்பில் உள்ளது.

இந்த கடன் சுமையை நிவர்த்திசெய்வதற்கான எந்தவொரு வேலைத்திட்டமும் ஜனாதிபதியின் உரையில் உள்ளடக்கப்படவில்லை - என்றார். (ஒ.4)




# மாவட்டங்களின் பிரிவினைகளால் எல்லையின் அபிவிருத்திகள் மந்தம்

## மக்கள் கவலை

முல்லைத்தீவு, ஜூன் 28

முல்லைத்தீவு அம்பலப்பெருமாள்குளத்தில் ஆனைவிழுந்தான்குளம் செல்லும் வீதியைச் சீரமைத்துத்தருமாறு இரு கிராமங்களின் மக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

1968ஆம் ஆண்டில் அம்பலப்பெருமாள்குளம் குடியேற்றத் திட்டம் உருவாக்கப்பட்டது. யாழ்ப்பாண மாவட்டமாக கிளிநொச்சி இருந்தபோது வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான்குளம் கிராம மக்கள் பயன்படுத்திய வீதி தற்போது பற்றைகள் வளர்ந்து காணப்படுகின்றது. அம்பலப்பெருமாள்குளத்தின் மக்கள் வாழ்கின்ற பகுதி மட்டும் ஒரு கிலோ மீற்றர் வீதி சீரமைக்கப்பட்டுள்ளபோதிலும் தொடர்ந்து செல்லும் மூன்று கிலோ மீற்றருக்கு அதிகமான தூரம், சீரமைக்கப்படாமலேயே உள்ளது.

குறித்த வீதியைச் சீரமைப்பதன் மூலம் ஆனைவிழுந்தான் வன்னேரிக்குளம் மக்கள் அக்கராயன் வருகை தராமல் அம்பலப்பெருமாள்குளம் ஊடாக துணுக்காயைச் சென்றடையக்கூடிய நிலைமை ஏற்படும். கிராமங்களும் போக்குவரத்தில் அபிவிருத்தி அடையும். குறித்த வீதியைச் சீரமைக்குமாறு கிராமங்களில் நடைபெறுகின்ற கூட்டங்களில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டாலும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள் என்ற பிரிவுகள் காரணமாக குறித்த வீதியைச் சீரமைப்பதில் இழுபறிகள் காணப்படுகின்றன. இரு மாவட்டச் செயலாளர்களும் எல்லைகளில் காணப்படுகின்ற பிரச்சினைகளுக்குத் தீர்வுகண்டு வீதிகளையும் ஏனைய அபிவிருத்தித் திட்டங்களையும் முன்னெடுக்க வேண்டும் - என்றனர். (ப-13)



# 30 குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதி

கொடிகாமம், ஜூன் 28

பயணத்தடை காரணமாக வருமானம் பாதிக்கப்பட்ட 30 குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டுள்ளன. கெருடாவில், கல்வயல் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 30 குடும்பங்களுக்கே இந்த உதவி வழங்கப்பட்டது. வரணியைச் சேர்ந்த கனடாவில் வசிக்கும் சமூக ஆர்வலர் தெய்வேந்திரன் சுதாஸ் மற்றும் அவரின் நண்பர்களின் பங்களிப்பில் துரைசிங்கம் கணேஸ்குமார் ஊடாக இந்த உதவி வழங்கப்பட்டது. (ப-159)

# பொய் கூறுகின்றார் ஜனாதிபதி கோத்தா

## எதிர்க்கட்சி சுட்டிக்காட்டு

கொழும்பு.ஜூன் 28

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, நாட்டு மக்களுக்காக ஆற்றிய உரையில் உண்மையான விபரங்கள் எதுவும் இல்லை. மக்களின் வலிகளுக்கு ஆற்றுப்படுத்தலாகவும் இல்லை. எதிர்க்கட்சித் தலைவர் கேட்டிருந்த கேள்விகளுக்கான பதில்களும் வழங்கப்படவில்லை. மீண்டும் பொய்களைக் கூறி மக்களை ஏமாற்றியுள்ளார்.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசீம் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதியின் உரையில் இதுவரை 25 ஆயிரம் கிலோ மீற்றர் நெடுஞ்சாலை அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார். ஒரு கிலோ மீற்றர் வீதி அபிவிருத்திக்கு 25 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். அவ்வாறெனில் 25 ஆயிரம் கிலோ மீற்றர் வீதி அபிவிருத்திக்கு 625 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கியிருக்கப்படவேண்டும். ஆனால் இவ்வாண்டு முழுவதுக்கும் நெடுஞ்சாலை அபிவிருத்திக்கு 110 பில்லியன் ரூபா நிதியே ஒதுக்கிடப்பட்டுள்ளது. எஞ்சிய நிதியை எவ்வாறு பெற்றுக்கொண்டீர்கள் என்பதைத் தெரியப்படுத்துங்கள். இதுவே ஜனாபதி கூறிய பெரிய பொய்யாகும்-என்றார். (ஒ.4)

# உயிலங்குளம் அணைக்கட்டு வழியான போக்குவரத்து மிகவும் ஆபத்தானது

## துணுக்காய் பிரதேச சபை உறுப்பினர் சுட்டிக்காட்டு

முல்லைத்தீவு, ஜூன் 28

முல்லைத்தீவு உயிலங்குளத்தின் அணைக்கட்டு நீண்ட காலமாகச் சீரமைக்கப்படாததால், அணைக்கட்டு வழியாக நடைபெறுகின்ற போக்குவரத்து ஆபத்தானதாக உருவெடுத்துள்ளது என்று துணுக்காய் பிரதேச சபை உறுப்பினர் ச.சுயன்சன் தெரிவித்தார். அவர் மேலும் தெரி விக்கையில்;

உயிலங்குளம் அணைக்கட்டு வழியாகவே போக்குவரத்துகள் நடைபெற்று வந்த நிலையில் அணைக்கட்டில் கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் சேதம் ஏற்பட்டது. துணுக்காய் கமநல சேவை நிலையமும் விவசாயிகளும் இணைந்து மண் மூடைகள் அடுக்கி குளத்தை உடைப்பெடுக்காமல் பாதுகாத்தனர். வருங்காலத்தில் அணைக்கட்டைப் பாதுகாப்பது என்றால் அணைக்கட்டின் கீழாக வீதியை உருவாக்குதல் முக்கியமாகத் திட்டமிடப்பட்டது. இதற்கான நிதி வரவுகளும் எதிர்பார்க்கப்பட்டன. ஆனால் எந்தவிதமான வேலைத் திட்டங்களும் இதுவரை நடைபெறவில்லை. துணுக்காயில் இருந்து உயிலங்குளம், தென்னியங்குளம், கோட்டைக்கட்டியகுளம் மற்றும் அம்பலப்பெருமாள்குளம் என்பவற்றுக்கு இவ் அணைக்கட்டு வழியாகவே தற்போதும் போக்குவரத்து நடைபெறுகின்றது. துணுக்காய் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் அணைக்கட்டைச் சீரமைப்போம் என்று கூறிய அதிகாரிகள் இதுவரை வேலைகளை ஆரம்பிக்கவில்லை. துணுக்காய் பிரதேச செயலகம் குறித்த வீதியை அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்தால் கமநல சேவை நிலையம் அணைக்கட்டைச் சீரமைத்துக் கொள்ளும் -என்றார். (ப-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேட்டை நாய்களிடம் இருந்து மாடுகளை காப்பாற்றுங்கள்

## இரணைதீவு மக்கள் கோரிக்கை



**கிளிநொச்சி, ஜூன் 28**

**கடந்த 2018 ஆம் ஆண்டு மீள்குடியேற அனுமதிக்கப்பட்ட நிலையில் அங்கு குடியேறி வசித்து வருகின்ற மக்கள் தங்க ளது கால்நடைகளை அங்குள்ள நூற்றுக் கணக்கான நாய்களிடமிருந்து பாதுகாத்துத் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.**

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்; 1992ஆம் ஆண்டு போர் காரண மாக இடம்பெயர்ந்த நாம் மீளவும் 2018 ஆம் ஆண்டு மீள்குடியேற அனுமதிக்கப்பட்டோம். நாங்கள் விட்டுச்சென்ற மாடுகளில், ஒரு சிலவே எஞ்சியிருந்தன. அவற்றை மீளவும் வளர்க்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதும் இரணை தீவில் காணப்படுகின்ற நூற்றுக் கணக்கான நாய்கள் பெரும் சவா லாகக் காணப்படுகின்றன. இந்த நாய்கள் கடற்படையினரால் வளர்க்கப்பட்ட நாய்கள். கன்றுகள் மற்றும் ஓரளவு வளர்ந்த கன்றுக் களை அவை பிடித்து, கொன்று உண்கின்றன. மாடுகள் கன்று களை ஈன்றவுடன் உடனடியா கவே அவற்றைப் பிடித்து கொன்று தின் றுவிடுகின்றன. நாங்கள் மீள்குடி யேறிய பின்னர் தொடர்ச்சியாக இது இடம்பெற்று வருகின்றது. இது தொடர்பில் கடற்படையினர், அதிகாரிகள், அரசியல்வாதிகள் என அனைவரிடமும், முறையிட்ட போதும், எவரும் இதுவரை கண்டு கொள்ளவில்லை. எமது வாழ்வா தாரத் தொழில்களில் ஒன்றான கால் நடை வளர்ப்பை மீளவும் ஆரம் பிப்பதற்கு இங்குள்ள நாய்களை கட்டுப்படுத்தித்தருமாறு கோரிக்கை விடுக்கின்றோம்- என்றனர். (ப-214)

கொரோனாத் தடுப்பூசித் திட்டம்

# 425.6 மில்லியன் டொலர் ஒதுக்கீடு




கொழும்பு, ஜூன் 28

இலங்கையில் கொரோனாத் தடுப் பூசி செலுத்தும் வேலைத்திட்டத்துக் காக 425.6 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியை அரசு ஒதுக்கியுள் ளது என்று சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித் துள்ளார்.

உலக வங்கி மற்றும் ஆசிய அபி விருத்தி வங்கி ஆகியவை இதற் கான நிதியை வழங்குவதற்கு உடன்பட்டுள்ளன. அதற்கமைவாக நாட்டில் 60 வீதமானோருக்கு தடுப் பூசி செலுத்துவதற்கு அரசு எதிர்பார்த்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஓ.4)

SRI LANKA POST

# தபால் பொருள்களுக்கான வரிக்கொள்கை திருத்தம்


கொழும்பு, ஜூன் 28

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு அனுப்பப்படும் கடிதம் தவிர்ந்த ஏனைய தபால் பொருள்களுக் கான வரிக்கொள்கை எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் திருத்தப்படவுள்ளது. அதற் கமைவாக 150 யூரோக்களுக்கும் குறைவான அனைத்து தபால் பொருள்களையும் அனுப்புபவர் வற் வரி செலுத்தவேண்டும்.

150 யூரோக்களுக்கும் அதிகமாக தபால் பொருள் களின் அனைத்து வரிகளையும் நாடுகளின் சுங் கம், பெறுநரிடமிருந்து சேகரிக்கும்.

இலங்கையில் வசிக்கும் ஒருவரிடமிருந்து, எந்த ஐரோப்பிய ஒன்றிய நாட்டிலும் வசிக்கும் ஒருவ ருக்கு அனுப்பப்படும் தனிப்பட்ட பரிசு அடங்கிய தபால் பொருள்களுக்கும் இந்த வரி பொருந்தும். தபால் பொருள்களைப் பெறுபவர்கள் தொடர்பு டைய வற் மற்றும் எல்லை வரி செலுத்த மறுத்தால், அதற்கு தாம் பொறுப்பேற்கமாட்டோம் என்று தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலதிக தகவல்களை 0112 320 017 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அறிவிக்கப்பட் டுள்ளது. (ஓ.4)



# தடுப்பூசியின் ஒரு டோஸுக்கு 33 வீதமே நோய் எதிர்ப்பு சக்தி

கொழும்பு, ஜூன் 28

எந்தவொரு கொரோனாத் தடுப் பூசியின் ஒரு டோஸும், மாறு பட்ட வைரஸுக்கு எதிராக, 33 வீதமான நோய் எதிர்ப்பு சக் தியை மட்டுமே வழங்கும் என்று சிறி ஜெயவர்த்தனபுர பல்க லைக்கழகத்தின் நோயெதிர்ப்பு மற்றும் மூலக்கூறு அறிவியல் துறையின் பகுப்பாய்வுப் பிரிவு உறுதிப்படுத்தியுள்ளது.

இது தொடர்பில் மருத்துவர் சந் திம ஜீவந்தர தெரிவிக்கையில், உலகளாவிய தொற்றுநோய்க் குக் காரணமான ஒரு வைர ஸுக்கு எதிராக, கணிசமான பாதுகாப்பு வீதம் இது அல்ல. தடுப்பூசியின் ஒரு டோஸ் எதிர் பார்த்தபடி பாதுகாப்பை வழங் காது. அதேவேளை இலங்கை யில் உள்ள அனைத்து தடுப் பூசிகளும் பி-117 அல்பா வைரஸ் மாறுபாட்டுக்கு எதிராக சாதகமான விளைவை ஏற்ப டுத்தியுள்ளது. எனினும் டெல்டா வைரஸ் மாறுபாட்டுக்கு எதிராக 33 வீதமே நோய் எதிர்ப்பு சக் தியை வழங்கும் என்றார். (ஓ.4)

ஒரு லட்சம் வேலைவாய்ப்பில் தெரிவானோரை

# ஆளணிப் பற்றாக்குறை நிலவும் பாடசாலைகளுக்கு நியமிக்கவும்

## கல்விச் சமூகத்தினர் கோரிக்கை

சாவகச்சேரி, ஜூன் 28

ஒரு லட்சம் வேலை வாய்ப்புத் திட் டத்தில் தெரிவுசெய்யப்பட்டவர் களை ஆளணிப் பற்றாக்குறையு டன் காணப்படும் பாடசாலைக ளுக்கு நியமிக்க வேண்டும் என்று கல்விச் சமூகத்தினர் கேட்டுள்ள னர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில், ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவு களிலும் மூன்று தேசிய பாடசாலை கள் உருவாக்கப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் பல பாடசாலைகளில் சிற்றூழியர் கள் எவரும் இன்றி மாணவர்களும் ஆசிரியர்களும் சில வேலைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. பல பாடசாலைகளில் காவலாளிகள், சுத்திகரிப்பு பணியாளர்கள் உள்ளிட்ட பல ஆளணிகள் காணப்படுகின்ற போதிலும், அவை இதுவரை கல்வித் திணைக்களத்தால் நிரப்பப்படவில்லை. இதனால் ஒரு லட்சம் வேலை வாய்ப் புத் திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப் படுவோரை பாடசாலைகளில் நிய மிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கோரிக்கை விடுக் கின்றோம்- என்றனர். (ஐ-9)

# அதிகளவு பக்தர்களுடன் திருவிழா: கலந்துகொண்டோருக்கு பி.சி.ஆர்.




சாவகச்சேரி, ஜூன் 28

சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினரின் அனுமதி பெறாமல் அதிகளவு பக்தர் களுடன் இடம்பெற்ற கோவில் இறுதி நாள், உற்சவத்தில் பங்குபற்றிய அனைவருக்கும் நேற்று சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத் தால் பி.சி.ஆர். பரிசோதனை மேற் கொள்ளப்பட்டது.

வரணி இடைக்குறிச்சி பகுதியில் உள்ள கோவிலில் சுகாதாரப் பகுதியினரின் அனுமதி பெறாமல் வருடாந்த திருவிழா நடத்தப்பட்டுள்ளது. திருவிழாவின், தீர்த்தத் திருவிழா கடந்த வியாழக்கிழமை நடைபெற்றபோது அங்கு சென்ற பொலி ஸார் அதிக பக்தர்கள் காணப்பட்டதால் அனைவரையும் தனிமைப்படுத்த நடவ டிக்கை மேற்கொண்டு, சுகாதாரப் பகுதி யினருக்கு அறிவித்திருந்தனர். அங்கு சென்ற சுகாதாரப் பகுதியினர் கோவில் வளாகத்தில் கூட்டமாக நின்ற அனைவ ரதும் விவரங்களைப் பெற்றனர். நேற்று அனைவருக்கும் பி.சி.ஆர். பரிசோத னையை மேற்கொண்டனர். பரிசோ தனை மேற்கொண்ட அனைவரையும் ஆய்வு அறிக்கை கிடைக்கும் வரை வெளியில் நடமாட வேண்டாமென அறி வுறுத்தினர். (ப-9)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மாகாணப் போக்குவரத்து இவ்வாரமும் சாத்தியப்படா

கொழும்பு,ஜூன் 28

மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்துச் சேவைகளை இந்த வாரமும் ஆரம்பிக்க முடியாது என்று போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.



கொரோனாத் தொற்று நிலைமை காரணமாக, பொதுப் போக்குவரத்துச் சேவைகளை இந்த வாரமும் மாகாணங்களுக்கு இடையில் பயணிக்க அனுமதிக்க முடியாது என்று கொரோனா கட்டுப்பாட்டுச் செயலணி அறிவித்துள்ளது.

அதற்கமைவாக பஸ் மற்றும் தொடருந்து சேவைகள் இந்த வாரமும் மாகாணங்களுக்குள் மட்டுமே தொடர்ந்து சேவையில் ஈடுபடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஓ-4)

## இராஜ ராஜேஸ்வரி வீதிக்கு முழுமையாகவே காப்பெற்

### வீ.அ.அ. சபையின் திட்டப் பிரிவு உறுதி

நவாலி, ஜூன் 28

நவாலியில் மிகுதி வீதியும் காப்பெற் வீதியாக சீரமைக்கப்படும் என்று வீதி அபிவிருத்தி அதிகார சபையின் திட்டப் பிரிவினர் நவாலி மக்களுக்கு உறுதியளித்துள்ளனர்.

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபையின் தவிசாளர் அ.ஜெபநேசனுடன் நேரடியாக நவாலி இராஜ ராஜேஸ்வரி வீதிக்கு நேற்றுமுன்தினம் சென்ற வீதி அபிவிருத்தி அதிகார சபையின் திட்டப் பிரிவு அலுவலர்கள் இராஜ ராஜேஸ்வரியில் கைவிடப்பட்ட மிகுதி 200 மீற்றர் வீதியை பார்வையிட்டதுடன், அவ் வீதியையும் இணைத்து சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்று உறுதியளித்துள்ளனர்.

நவாலி தெற்கு இராஜ ராஜேஸ்வரி வீதி வலி.தென்மேற்கு, மானிப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட வீதியாகும். இவ் வீதியை மீள் சீரமைத்து தருமாறு நவாலி 'ஹேமலதா ஞாபகார்த்த சனசமூக நிலையம் 2016ஆம் ஆண்டில் இருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எழுதிய கடிதத்தின் பிரகாரம் காப்பெற் வீதி சீரமைப்புத் திட்டத்துக்குள் குறித்த வீதி உள்வாங்கப்பட்டது, பின்னர் 2021 ஜூன் 14ஆம் திகதி மீள்சீரமைப்புப் பணி இடம்பெறும் போது இராஜ ராஜேஸ்வரி வீதியின் முழு வீதியில் 200 மீற்றர் நீளமான வீதியின் இணைப்பு வீதி கைவிடப்பட்டே சீரமைப்புப் பணி இடம்பெற்றது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் மீதி வீதியையும் சீரமைக்குமாறு கோரியும், நவாலி மக்கள் ஒன்றிணைந்து போராட்டம் ஒன்றில் ஈடுபட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ப-50)



முல்லைத்தீவு அம்பலப்பெருமாள்குளம் கிராமத்தில் இருந்து அக்கராயன் பிரதேசத்தை நோக்கிச் செல்லும் வீதியில் 53 ஆண்டுகளுக்கு மேலாக சீரமைக்கப்படாது இருந்த பாலம் தற்போது சீரமைக்கப்பட்டுள்ளது. (ப-13)

## சில கிராமங்கள் தனிமைப்படுத்தலில்

கொழும்பு, ஜூன் 28



3 மாவட்டங்களைச் சேர்ந்த சில கிராம சேவகர் பிரிவுகள் நேற்றுக் காலை முதல் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என்று கொவிட் - 19 பரவலைத் தடுக்கும் தேசிய செயற்பாட்டு நிலையத்தின் பிரதானியும், இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அதற்கமைவாக கொழும்பு, இரத்தினபுரி மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த, குறிப்பிட்ட சில கிராம சேவகர் பிரிவுகள் தனிமைப்படுத்தப் பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஓ.4)

# விலங்குகளுக்கு கொரோனா: மக்கள் பீதியடைய வேண்டாம்

### கால்நடை மருத்து அதிகாரிகள் சங்கம் ஆலோசனை

கொழும்பு,ஜூன் 28

இலங்கையில் விலங்குகளுக்கும் கொரோனாத் தொற்று பரவியுள்ளமை தொடர்பில், மக்கள் அச்சமடைய வேண்டியதில்லை என்று அரச கால்நடை மருத்துவ அதிகாரிகள் சங்கம் ஆலோசனை வழங்கியுள்ளது.

இது தொடர்பில் சங்கத்தின் உதவிச் செயலாளர் வைத்தியர் எஸ். சுகிர்தன் தெரிவிக்கையில்,

கொழும்பு பல்கலைக்கழகத்தின் முதுமாணிக்கல்வியை மேற்கொள்பவரால் 2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட ஆய்வை மேற்கோள்காட்டி இலங்கையில் வௌவால்களுக்கு கொரோனா என்ற செய்தி ஊடகங்களில் வெளியிடப்பட்டுள்ளது.

அந்தச் செய்தியை அறிந்து நாட்டு மக்கள் பீதியடைந்துள்ளனர். இந்த அச்சத்தின் காரணமாக அவர்கள் வௌவால்களை வீடுகளை விட்டு வெளியேற்ற வேண்டுமா,வௌவால்களை தங்கள் பகுதிகளை விட்டு வெளியேற்ற வேண்டுமா, வௌவால்கள் பழங்களைச் சாப்பிடுவதால், பழங்களைச் சாப்பிடுவது பிரச்சினைகளை ஏற்படுத்துமா என்று கேள்வி எழுப்புகின்றனர்.



இந்தப் பிரச்சினையால் இலங்கை மக்கள் பழங்களைச் சாப்பிடுவதை நிறுத்தினால், அது பழ உற்பத்தியாளர்களுக்கு சிரமத்தை ஏற்படுத்தும். எனவே, ஒரு பொறுப்புள்ள தொழிற்சங்கமாக, இந்த விடயம் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்திக் கொள்ள விரும்புகின்றோம்.

விலங்குகளில் கொரோனா வைரஸ் இருப்பது கால்நடை வைத்திய விஞ்ஞானத்துக்கு புதிய தொன்றல்ல.

கொரோனா வைரஸின் பல்வேறு விகாரங்கள் (strains) 1930 ஆம் ஆண்டுகளில் இருந்து விலங்குகளில் பதிவாகியுள்ளன. இருப்பினும், விலங்குகளில் இருக்கும் கொரோனா வைரஸ் விகாரங்கள் மனிதர்களுக்குப் பரவுகின்றன என்பது அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்படவில்லை.

எனவே, விலங்குகளில் கொரோனா வைரஸ் இருப்பதைப் பற்றி மக்கள் அச்சமடைய வேண்டியதில்லை.

கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம், பேராதனைப் பல்கலைக்கழக விலங்கு மருத்துவபீடம், மற்றும் பிற அறிவியல் நிறுவனங்கள் தற்போது விலங்குகளில் கொரோனா இருப்பது குறித்து விரிவான ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றன.

எனவே வௌவால்களில் பதிவான கொரோனா வைரஸ் திரிபுக்கும் கொவிட் - 19 நோயை ஏற்படுத்தும் சார்ஸ் கோவ் - 2 (Sars Cov2) வைரஸின் தற்போதைய திரிபுக்கும் நேரடித் தொடர்பு இல்லை.

விஞ்ஞானிகளின் ஆராய்ச்சிகளைப் பாராட்டுகின்றோம். எவ்வாறாயினும், அறிக்கைகளை வெளியிடும்போது சமூகத்தில் கவனம் செலுத்துவதோடு, தேவையில்லாமல் பொதுமக்களை அச்சுறுத்துவதைத் தவிர்க்க வேண்டும் - என்றார். (ஓ.4.110)

## 'சூழகம்' அமைப்பால் நன்னீர் கிணறு சீரமைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 28

புங்குடுதீவுப் பகுதியில், சூழகம் அமைப்பால் 2 லட்சத்து, 60ஆயிரம் ரூபா செலவில் நன்னீர் கிணறு ஒன்று சீரமைத்து வழங்கப்பட்டுள்ளது.

சூழலியல் மேம்பாட்டு அமைவனத்தின் (சூழகம்) செயலாளர் கருணாகரன் நாவலனின் ஏற்பாட்டில் புங்குடுதீவு மூன்றாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட துரைச்சுவாமி நீதிராஜாவின் முழுமையான நிதியுதவியில் இந்த உதவி முன்னெடுக்கப்பட்டது.

மேற்படி நன்னீர் கிணறானது புங்குடுதீவு மூன்றாம் வட்டாரம் சங்கதார்கேணியில் குறிகாட்டுவான் நோக்கிச் செல்லும் பிரதான வீதியில் அமைந்துள்ளது. 1990 க்கு முன்பிருந்தே நான்காம் வட்டாரம் நுணுக்கல் மற்றும், தொழிலாளர்புரம் பகுதிகளைச் சேர்ந்த 50 க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் இக் கிணற்றை குளிப்பதற்காகப் பயன்படுத்தி வந்தனர். இக்கிணறு மீள் சீரமைக்கப்பட்டதோடு பொதுமக்கள் குளிப்பதற் காக சுற்று மதில் அமைக்கப்பட்டு, கோமாதாக்களுக்கான நீர் நிரப்பும் தொட்டிகளும் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப)



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



## கற்கள் பறிக்கப்பட்டு இரு மாதங்கள் கடந்தும் வீதி சீரமைக்கப்படவில்லை

*நவாலி சங்கையான் வீதி மக்கள் விசனம்*

நவாலி, ஜூன் 28

நவாலி கிழக்கு சங்கையான் வீதி ஒரு லட்சம் கிலோ மீற்றர் திட்டத்தின் கீழ் மீள்சீரமைப்புக்காக கற்கள் பறிக்கப்பட்டு 2 மாதங்கள் கடந்த நிலையிலும் எவ்வித தொடர்வேலையும் இடம்பெறவில்லை என்றும், இதனால் அவ்வீதியூடுடான எவ்வித போக்குவரத்தும் செய்யமுடியாத அவல நிலை ஏற்பட்டுள்ளது என்றும் அவ்வீதியை பயன்படுத்தும் மக்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில், வலி. தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட நவாலி கிழக்கு சங்கையான் வீதி ஒரு லட்சம் கிலோ மீற்றர் வீதி சீரமைப்புத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டு வீதி அபிவிருத்தி அதிகார சபையின் திட்டத்தின் கீழ் ஒப்பந்தகாரரிடம் ஒப்படைக்கப்பட்டது. அவ் வீதியில் உள்ள 100 லோட் மண் அள்ளப்பட்டு கற்கள் பறிக்கப்பட்டன.

ஆனால் 2 மாதங்கள் கழிந்த நிலையிலும் மேலதிக மீள் சீரமைப்பு இன்றி கற்கள் கைவிடப்பட்டுள்ளன. இதனால் வயோதிபர்கள், சிறுவர்கள் , சைக்கிளில் செல்வோர் மற்றும் மோட்டார் சைக்கிளில் செல்வோர் தினமும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்வதுடன் பலர் அவ்வீதியால் செல்லும்போது தடுக்கி வீழ்ந்து காயங்களுக்கும் உள்ளான அவல நிலையையும் எதிர்கொண்டுள்ளனர்.

எனவே இம்மாத இறுதிக்குள் ஒப்பந்தகாரர் வீதியின் சீரமைப்பு தொடர்பில் அசமந்தமாக இருப்பின் எமது மக்களைத் திரட்டி அடுத்த கட்ட நடவடிக்கையை உடன் மேற்கொள்வோம் - என்றனர். (ப-50)

# அடுத்த போகத்துக்கு சேதனப்பசளை இலவசம்

*விவசாய அமைச்சர் தெரிவிப்பு*



**கொழும்பு, ஜூன் 28**

**நாட்டின் அடுத்த போகத்துக்கு சேதனப் பசளை இலவசமாக விநியோகிக் கப்படும் என்று விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.**

மட்டக்களப்பு மண்முனை மேற்கு பிரதேசத்தில், நெல் சந்தைப்படுத்தல் சபையூடாக நிர்ணய விலைக்கு நெல் கொள்வனவு செய்யும் வேலைத்திட்டத்தை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இம்முறை மாத்திரம் விவசாயிகளுக்கு இரசாயனப்பசளை வழங்கப்படும். எனினும் அடுத்த போகத்துக்கு சேதனப்பசளை வழங்கப்படும் இதனை நாங்கள் இலவசமாகவே வழங்கப்போகின்றோம். ஆகையால் விவசாயிகள் எவரும் அச்சம் கொள்ளத் தேவையில்லை. போர் நடைபெற்ற காலத்தில் பெரும்பாலும் யூரியா பயன்படுத்தவில்லை. விவசாயிகள் அனைவரும் சேதனப்பசளையைப் பாவித்தே விவசாயத்தை மேற்கொண்டனர். விவசாயிகள் நலனுக்காகவே இந்த அரசு உள்ளது. விவசாயிகளின், மக்களின் நன்மைகருதி இந்த அரசு பயணிக்கும்- என்றார்.

மண்முனை மேற்கு வவுணதீவுப் பிரதேசத்திலுள்ள அரசடிச்சேனை நெல் சந்தைப்படுத்தல் நிலையத்தில், இந்த வருடத்தின் சிறுபோகத்தில் விளைந்த உலர்த்திய நெல் அரசின் நிர்ணய விலையான 56 ரூபா 50 சதத்துக்குக் கொள்வனவு செய்யப்பட்டது. நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த, இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் சிவனேசதுரை சந்திரகாந்தன் மற்றும் நெல் சந்தைப்படுத்தல் சபையின் பிராந்திய முகாமையாளர், அமைச்சின் செயலாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஓ.4)

## டிறிபேக் கல்லூரியின் மாணவர்களுக்கு உதவி

கொடிகாமம், ஜூன் 28

பயணத்தடை காரணமாக பாதிக்கப்பட்ட சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் கல்வி கற்கும் பொருண்மியம் நலிவடைந்த 150 மாணவர்களின் குடும்பங்களுக்கு மூன்று லட்சம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்கள் பாடசாலை அதிபர் தலைமையில் வழங்கப்பட்டன.

ஆஸ்திரேலியா, பழைய மாணவர் மற்றும் ஆசிரியர் சங்கத்தினர் தலா 2ஆயிரம் ரூபா பெறு மதியான குறித்த உலர் உணவுப்பொருள்களை வழங்கியுள்ளனர். (ப-159)



## லட்சுமி கரங்களால் உணவுப்பொருள்கள்

மன்னார், ஜூன் 28

லட்சுமி கரங்கள் தொண்டு நிறுவனத்தால் யாழ்ப்பாணம், கொழும்புத்துறையில் உள்ள பொருண்மியம் நலிவடைந்த மக்களுக்கு நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன. தாயக மக்களின் தொண்டு நிறுவனமான " லக்சுமி கரங்கள் "தனது மனிதநேய பணிகளை புலம்பெயர் தேசத்தின் உறவுகளின் பங்களிப்புடன் மன்னார், முல்லைத்தீவு,கிளிநொச்சி, வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை உட்பட மலையகத்தில் தனது பணிகளை ஆற்றி வந்த நிலையில், யாழ்ப்பாணத்தில் முதல் தடவையாக தனது மனித நேயப் பணிகளை ஆரம்பித்துள்ளது. அந்தவகையில் நேற்று முன்தினம் கொழும்புத்துறையில் தற்போதைய இடர் சூழ் நிலையில் நாளாந்த கூலிதொழிலை இழந்த ஐம்பது குடும்பங்களுக்கு ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான உலர் உணவுப்பொருள்கள் வழங்கப்பட்டன.

நிகழ்வில், லக்சுமி கரங்களின் இலங்கைக்கான பணிப்பாளர் செ.குலநாயகம், மன்னார் மாவட்ட லக்சுமி கரங்களின் இணைப்பாளரும் மாவட்ட இழப்பீட்டுக்கான உத்தியோகத்தருமான ம. சுதாகர், மற்றும், யாழ். மாவட்ட லக்சுமி கரங்களின் இணைப்பாளர் திருமதி பிரியா ஆகியோர் உள்ளட்ட யாழ். மாவட்ட லக்சுமி கரங்களின் தொண்டர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ப-213)




# தனிநபரால் மாந்தை மேற்கில் பல ஏக்கர் காணிகள் அபகரிப்பு

*நேரில் சென்றார் சாள்ஸ் எம்.பி*

மன்னார், ஜூன் 28

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கள்ளியடிப் பகுதியில் கடந்த 2013 ஆம் ஆண்டு மக்களுக்கு வழங்கப்படும் என்று முடிவெடுக்கப்பட்ட காணிகளை தனி நபர் ஒருவர் அபகரித்து, அத்துமீறிச் செயற்பட்டு வருகின்றார் என்று அப்பகுதி மக்களால் முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் நேற்று முன்தினம் குறித்த பகுதிக்கு நேரில் சென்று நிலைமையை அவதானித்தார்.

குறித்த பகுதியில் மக்களின் விவசாய நடவடிக்கைக்கென 2013 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட காணிகள் வனவளத் திணைக்களத்தால் எல்லை இடப்பட்டிருந்த நிலையில் அண்மையில் மக்களின் தேவைக்காக விடுவிக்கப்பட்டிருந்தன. பொருளாதார நிலை மற்றும் 'கொரோனா' பிரச்சினை காரணமாக மக்கள் காணிகளைத் துப்புரவுசெய்யாத நிலையில் மாந்தை மேற்கு பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் ஒரு வார காலத்துக்கு மேலாக மக்களின் காணிகளைத் துப்புரவுசெய்தது டன், காணிகளை ஆக்கிரமிக்கும் செயற்பாட்டிலும் ஈடுபட்டு வந்துள்ளார்.

இது தொடர்பில் மக்களால் கிராம அலுவலகர் மற்றும் பிரதேச செயலாளர் ஆகியோருக்கு பலமுறை தெரிவித்தும் நடவடிக்கை எடுக்கப் படாத நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மல நாதனிடம் முறையிட்டிருந்தனர்.

இதனை அடுத்தே அவர் நேற்று அங்கு சென்று பிரச்சினைகளைக் கேட்டறிந்தார். (ப-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேசத்தின் நற்பெயருக்காகவே தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை

## சிறைக்கைதிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான அமைப்பு சுட்டிக்காட்டு

**கொழும்பு, ஜூன் 28**

**தமிழ் அரசியல் கைதிகளுக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கியிருந்தார். ஆனால் அவர்கள் அனைவருமே விரைவில் விடுதலைசெய்யப்பட விருந்தவர்கள். எனினும் அவர்களை விடுதலைசெய்து, சர்வதேசத்திடம் நற்பெயரைப் பெற்றுக்கொள்ள அவர் முயற்சித்து வருகின்றார்.**

இவ்வாறு சிறைக்கைதிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பில் அமைப்பின் தலைவர் சட்டத்தரணி சேனக்க பெரேரா தெரிவிக்கையில்,

சிறைச்சாலைகளில் சிறைவைக்கப்பட்டிருந்த பலர் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களுக்கு உயிர் அச்சுறுத்தல் எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தபோதிலும், சுற்றிவளைப்புக்காக அழைத்துச் சென்று பலர் கொல்லப்பட்டிருந்தனர். பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களும் கொல்லப்பட்டுள்ளனர். இது அனைவரும் அறிந்ததே.

இதேவேளை பயங்கரவாத தடைச் சட்டத்தைப் பயன்படுத்தி மக்களின் கருத்துச் சுதந்திரம் மற்றும் முற்போக்கான நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த முயற்சித்து வருகின்றனர்.

15 தொடக்கம் 20 வருடங்களாக பல கைதிகள் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்க ஜனாதிபதி எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. ஆனால் தூக்குத் தண்டனை கைதியான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவை ஐந்து வருடங்களுக்குள் பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்துள்ளார் - என்றார்.

அமைப்பின் செயலாளர் சுதேஷ் நந்திமால் சில்வா தெரிவிக்கையில்,

தற்போதைய ஜனாதிபதி மக்களுக்கான ஜனாதிபதி அல்ல. மிருசுவில் கொலைக் குற்றவாளியான முன்னாள் இராணுவ அதிகாரி சுனில் ரத்நாயக்க மற்றும் தூக்குத் தண்டனைக் கைதியான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா ஆகியோரின் ஜனாதிபதி ஆவார். அதன் காரணமாகவே அவர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்குவதில், அவர் ஆர்வமாகச் செயற்பட்டுள்ளார். துமிந்த சில்வாவுடன் அதே குற்றத்துக்காக தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள ஏனைய கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கவும் அவர் நடவடிக்கை எடுக்கவில்லை. பல வருட காலமாக சிறைச்சாலைகளில் இருக்கும் கைதிகளைப் பற்றி எண்ணாது, துமிந்த சில்வாவுக்கு மாத்திரம் பொதுமன்னிப்பு வழங்குவதற்கான காரணம் என்ன? அவரை மாத்திரமா மனிதராக எண்ணுவீர்கள். ஏனைய கைதிகளைப் பற்றி சிந்தித்துப் பார்க்க மாட்டீர்களா? இன்று கைதிகள் சிறைச்சாலைகளுக்குள் சித்திர வதைக்குள்ளாகி வருகின்றனர். பொலிஸாரின் பாதுகாப்பில் இருக்கும்போதும் பல கைதிகள் கொல்லப்பட்டுள்ளனர். இவற்றைத் தடுப்பதற்கு எவ்வாறான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்றார். (ஓ.4)

# கோத்தாவின் புதிய நாடகம்

## எதிர்க்கட்சி சாடல்

கொழும்பு, ஜூன் 28

பௌத்தம் மற்றும் சிங்களம் ஆகியவற்றின் ஊடாக, மீண்டும் மதம், இனம், நாடு மற்றும் போர் உள்ளிட்ட புதிய நாடகத்தை அரங்கேற்றி, மக்கள் மனதில் இடம் பிடிக்க ஜனாதிபதி முயற்சித்துள்ளார். தொழில்நுட்பத்தின் ஊடாக போலியான பின்புலத் தோற்றத்தைக் காண்பித்துள்ளதால், அவர் படுதோல்வியடைந்துள்ளார்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தலின்போது எனக்கு உதவியவர்களின் கோரிக்கையை நிறைவேற்றவில்லை என்பதற்காக எம்மீது குறைகூறுகின்றனர். இதனால் உண்மை மழுங்கடிக்கப்பட்டு பொய் தலைதூக்கியுள்ளது என்று ஜனாதிபதி தெரிவித்தார். அவ்வாறெனில் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட முன்னர் மக்கள், சகாக்கள் அல்லது ஏனையோரிடம் இரகசிய ஒப்பந்தங்களை செய்து, தற்போது அவற்றை நிறைவேற்றியமையின் காரணமாகவா எதிர்ப்புக்கள் மேலெழுந்துள்ளன என்று கேள்வியெழுப்புகின்றோம். ஜனாதிபதியின் உரையிலும் உண்மை மழுங்கடித்து பொய் தலைதூக்கியுள்ளது. இவ்வாறு உண்மையை மறைப்பதற்காகவே ருவன்வெலிசாயவைப் போன்ற பின்புலத் தோற்றத்தை தொழில்நுட்பத்தினூடாக போலியாக உருவாக்கி உரையாற்றியுள்ளார் - என்றார். (ஓ.4)

# மோ. சைக்கிள்கள் விபத்து; ஒருவர் மருத்துவமனையில்

கொடிகாமம் ஜூன் 28

இரண்டு மோட்டார் சைக்கிள்கள் எதிர் எதிராக மோதியதில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு 8.15 மணியளவில் கொடிகாமம் பருத்தித்துறை வீதியில் எருவன் பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் இடம்பெற்றுள்ளது. ஒட்டுவெளி மிருசுவிலைச் சேர்ந்த 23 வயதுடைய விநாயகமூர்த்தி கஜேந்திரன் என்பவரே படுகாயமடைந்தவராவார். சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ப-159)

# போலியான தகவல்களை வெளியிட்டவருக்கு பிணை

கொழும்பு, ஜூன் 28

அஸ்ராஜெனகா தடுப்பூசி தொடர்பில் போலியான தகவல்களை சமூக வலைத்தளங்களில் பதிவேற்றினார் என்ற குற்றச்சாட்டில் கைதான நபர், பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் முன்னாள் தேசிய அமைப்பாளர் அசேல சம்பத்தே, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

அவர் கொழும்பு நீதிவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் முற்படுத்தப்பட்டார்.

அவரை ஐந்து லட்சம் ரூபா பெறுமதியான இரு சரீரப் பிணையில் விடுவிக்க நீதிமன்று உத்தரவிட்டது. (ஓ.4)



காங்கேசன்துறை சாரணரால்

# 'சூம்' செயலியூடாக மரக்கன்றுகள் நடுகை

யாழ்ப்பாணம், ஜூன் 28

பேடன்பவல் தினத்தை முன்னிட்டு ஒரு லட்சம் மரக்கன்றுகளை நடும் இலங்கை சாரணர் சங்கத் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தில் 'சூம்' செயலியூடாக ஆயிரம் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன.

காங்கேசன்துறை மாவட்ட சாரணர் கிளைச் சங்கத்தால் மாவட்ட எல்லைக்குட்பட்ட பாடசாலை சாரணர்களுக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டு நடுகை செய்யப்பட்டுள்ளன.

நிகழ்வில் காங்கேசன்துறை மாவட்ட சாரணர் கிளைச் சங்கத்தின் தலைவர், தெல்லிப்பழை பிரதேச செயலாளர் சிவசிறி, காங்கேசன்துறை மாவட்ட ஆணையாளர் ஜெயபவன், உதவி மாவட்ட ஆணையாளர்கள், சாரண ஆசிரியர்கள், கிளைச்சங்க உத்தியோகத்தர்கள், சாரணர்கள், திரிசாரணர்கள் மற்றும் குருளைச் சாரணர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். இச்செயற்றிட்டத்துக்கு புலம்பெயர் மகாஜன கல்லூரியின் சாரணர்கள் நிதிப்பங்களிப்பு வழங்கினர். (ப-20)

# தடுப்பூசி பெற்ற தொழிற்சாலை பெண்களுக்கு முகத்தில் வீக்கம்

## இருவர் யாழ். போதனாவில் சேர்க்கப்பட்டனர்

கொடிகாமம், ஜூன் 28

**கிளிநொச்சி ஆடைத் தொழிற்சாலையில் கொரோனாத் தடுப்பூசி வழங்கப்பட்ட பெண் பணியாளர்கள் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.**

**கிளிநொச்சி ஆடைத் தொழிற்சாலையில் கொரோனாத் தடுப்பூசி வழங்கப்பட்டு வரும் நிலையில் நேற்றுமுன்தினம் கொரோனாத் தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது.**

குறித்த சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது:

கிளிநொச்சி ஆடைத் தொழிற்சாலையில் கொரோனாத் தடுப்பூசி வழங்கப்பட்டு வருகின்றது. நேற்று முன்தினம் குறித்த தடுப்பூசி வழங்கப்பட்டபோது தொழிற்சாலையின் பணியாளர்களான தென்மராட்சியைச் சேர்ந்த மூன்று பெண்களும் அதைப் பெற்றுக்கொண்டனர். பணி முடிந்து வீடு திரும்பிய நிலையில் வந்த அவர்களுக்கு திடீர் சுகவீனம் ஏற்பட்டுள்ளது. இதனால் அவர்கள் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். எனினும் அதில் இரண்டு பெண்களுக்கு முகம் வீக்கமடைந்து உருமாறியதால், மேலதிக சிகிச்சைக்காக அவர்கள் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். (ப-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதாரக் கட்டமைப்பில் இலங்கை முன்னேற்றம்

## உலக சுகாதார ஸ்தாபனம் பாராட்டு

கொழும்பு,ஜூன் 28

**கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தும் முயற்சிகளில், இலங்கை முன்னேற்றகரமான சுகாதார சேவைக் கட்டமைப்பைக் கொண்டுள்ளது என்று உலக சுகாதார ஸ்தாபனம் பாராட்டு தெரிவித்துள்ளது.**

உலக சுகாதார ஸ்தாபனத்தின் இலங்கைக்கான பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ள கலாநிதி அலகா சிங் மற்றும் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன ஆகியோருக்கிடையிலான சந்திப்பு வெளிவிவகார அமைச்சில் இடம் பெற்றது.

இதன்போது இலங்கையின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்ட அலகா சிங்குக்கு அமைச்சர் வாழ்த்துத் தெரிவித்தார். உலக சுகாதார ஸ்தாபனத்துக்கும், இலங்கைக்கும் இடையிலான நீண்டகால நல்லுறவு தொடர்பில் நினைவு கூர்ந்தார். 1952 ஆம் ஆண்டில் இலங்கையில் நிறுவப்பட்ட உலக சுகாதார ஸ்தாபனத்தின் கிளை அலுவலகமே, இலங்கையில் ஸ்தாபிக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையின் முதலாவது உபகட்டமைப்பாகும் என்றும் சுட்டிக்காட்டினார்.

கொவிட் 19 வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு உலக சுகாதார ஸ்தாபனத்தால் வழங்கப்பட்ட உதவிகளுக்கும் நன்றி தெரிவித்தார்.

அதேவேளை இலங்கையின் முன்னேற்றகரமான சுகாதார சேவைக் கட்டமைப்புக்கு பிரதிநிதி அலகா சிங் பாராட்டுத் தெரிவித்தார். பிராந்தியத்திலுள்ள ஏனைய நாடுகளுக்கு இலங்கை மிகச்சிறந்த முன்னுதாரணமாகத் திகழ்கின்றது என்றும் குறிப்பிட்டார். இலங்கைக்கு கொரோனாத் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொடுப்பதிலும், இந்த மோசமான தொற்றுநோய்க்குப் பின்னரான மீட்சி நடவடிக்கைகளிலும் உலக சுகாதார ஸ்தாபனம் முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் என்றும் அலகா சிங் உறுதியளித்தார்.

(ஒ.4)

# தன்னிச்சையான தீர்மானங்களால் நாட்டின் பொருளாதாரமே வீழ்ச்சி!

## முன்னாள் சபாநாயகர் தெரிவிப்பு

கொழும்பு,ஜூன் 28

நாட்டின் தலைவர்கள் மேற்கொண்டிருக்கும் தன்னிச்சையானதும் முன்யோசனையற்றதுமான தீர்மானங்களின் விளைவாக, நாட்டின் பொருளாதாரமே கடும் வீழ்ச்சியடைந்துள்ளது.

இவ்வாறு முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடு பொருளாதார ரீதியில் முழுமையாக முடங்கும் வகையிலான பெரும் நெருக்கடியொன்றுக்கு முகங்கொடுத்துள்ளது. அதேவேளை மறுபுறம் கொவிட்-19 வைரஸ் தொற்றானது நாடு முழுவதும் மிக வேகமாகப் பரவி வருகின்றது. இவ்வாறானதொரு சூழ்நிலையில் விவசாயத்துறை வீழ்ச்சியை எதிர்கொண்டுள்ளது. விவசாயிகள் அவர்களது பயிர்ச் செய்கை நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமான உரத்துக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. மற்றொரு புறத்தில் மீனவர்களும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். கல்வியைப் பெற்றுக்கொள்ளும் மாணவர்களின் உரிமையிலும் தாக்கங்கள் ஏற்பட்டுள்ளன.

இந்த விடயங்கள் தொடர்பில் நாட்டின் ஆட்சியாளர்கள் விசேட கவனம் செலுத்த வேண்டும். இனம், மதம் மற்றும் கட்சி பேதங்கள் ஆகியவற்றைப் புறந்தள்ளி நாட்டு மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து சரியான தீர்வொன்றைக் கண்டறிய வேண்டும். நாம் ஏற்கனவே கூறியது போன்று அரசமைப்புக்கான 20 ஆவது திருத்தத்தின் மூலம் அனைத்து அதிகாரங்களும் தனியொருவரிடத்தில் குவிக்கப்பட்டுள்ளன. அதன் காரணமாக நாட்டின் ஏனைய ஜனநாயகக் கட்டமைப்புக்கள் வலுவிழந்துள்ளன.

நாடு மிக மோசமான தொற்றுநோய்ப்பரவலுக்கு முகங்கொடுத்திருக்கும் வேளையில், அதனை வெற்றிகரமாக எதிர்கொள்ள முடியாமைக்கும் அதுவே பிரதான காரணமாகும். நாட்டை இராணுவமயப்படுத்துவதன் ஊடாக கொரோனாவை இல்லாதொழிக்க முடியாது. மாறாக இவ்வாறான நடவடிக்கைகளால் மக்களின் ஜனநாயக சுதந்திரமே கேள்விக்குள்ளாக்கப்படும் - என்றார்.

(ஒ.4)



# இறங்குதுறையை சீரமைத்துத் தாருங்கள்

## இரணைதீவு மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி, ஜூன் 28

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலக பிரிவில் உள்ள இரணைதீவில் 2019 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டு 2020 இல் ஏற்பட்ட புரேவி புயலால் முற்றுமுழுதாக சேதமடைந்துள்ள இறங்குதுறையை மீளவும் புனரமைத்துத்தருமாறு கடற்றொழிலாளர்களும் பொதுமக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த இறங்குதுறை சேதமடைந்துள்ளதால், கடற்றொழிலாளர்கள் மற்றும் பொதுமக்கள் போக்குவரத்து மற்றும் கடற்றொழில் சார்ந்து நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர். எனவே தங்களது இறங்குதுறையை மீளவும் சீரமைத்துத் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (கு-214)

*மாவட்ட ஆட்சியாளரின் சந்திப்பையடுத்து*

# காத்திருப்புக் கவனவீர்ப்பில் திருச்சி முகாம் ஈழ ஏதிலிகள்

சென்னை, ஜூன் 28

தமிழ்நாடு திருச்சி சிறப்பு முகாம் சிறையில் அடைக்கப்பட்டுள்ள இலங்கை தமிழ் ஏதிலிகள், தங்களை விடுதலைசெய்யுமாறுகோரி கடந்த 09ஆம் திகதி முதல் கவனவீர்ப்பு போராட்டம் மேற்கொண்டிருந்த நிலையில், மாவட்ட ஆட்சியாளர், நேற்று திருச்சி சிறைக்குச் சென்று அவர்களின் குறைகளைக் கேட்டறிந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அவர்களின் கோரிக்கை சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க முயற்சிக்கின்றேன் என்று அவர் கூறிச் சென்றுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதனால், மாவட்ட ஆட்சியர் நல்லதொரு அறிவிப்பை வெளியிடுவார் என்ற நம்பிக்கையில் காத்திருப்பு போராட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றது என்று ஏதிலிகள் கூறினர். (கு-19)

# பொய்களையே கூறி மக்களை ஏமாற்றாதீர்

## உடன் பதவி விலகுமாறு வலியுறுத்து

கொழும்பு,ஜூன் 28

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச நாட்டு மக்களுக்கு ஆற்றிய விசேட உரையில், மக்கள் எதிர்பார்த்த எந்தவொரு விடயமும் இல்லை. தொடர்ச்சியாக மீண்டும் மீண்டும் பொய்களையே கூறி மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கின்றார். அவர் உடனடியாக பதவி விலக வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் அவர் கூறிய விடயங்களை மக்கள் எதிர்பார்க்கவில்லை. மாறாக அத்தியாவசிய பொருள்கள் மற்றும் எரிபொருள் ஆகியவற்றின் விலை குறைப்பையும், இலவச உரத்தையும், தடுப்பூசியையுமே எதிர்பார்த்தனர். தேசிய பாதுகாப்பு தொடர்பில் ஜனாதிபதி கருத்துத் தெரிவித்தார். தற்போது நாட்டின் புலனாய்வுப் பிரிவு பலமடைந்துள்ளது என்றும் கூறினார். அவ்வாறெனில் ஆட்சியைப் பொறுப்பேற்று ஒன்றரை வருடங்கள் கடந்துள்ள போதிலும் ஏன் அந்த புலனாய்வுப் பிரிவினரால் யாரையும் கைதுசெய்ய முடியவில்லை? குறைந்தபட்சம் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரைகளைக் கூட நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை. தற்போது போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்தியுள்ளோம் என்று கூறுகின்றார். ஆனால் நல்லாட்சி அரசில் 2018 ஆம் ஆண்டு முழு வருடத்திலும் 45 கிலோ கிராம் ஹெரோய்ன் மாத்திரமே கைப்பற்றப்பட்டது. ஆனால் தற்போது அவ்வாறான நிலைமை இல்லை. நல்லாட்சி அரசில் இடர்கள் ஏற்படவில்லை என்று ஜனாதிபதி கூறுகின்றார்.

எமது ஆட்சியில் ஒவ்வொரு ஆண்டும் இடர் ஏற்பட்டது. ஆனால் நாம் ஒன்றரை மில்லியன் இடர் காப்புறுதி செய்திருந்தமையால் அதனை மக்களுக்கு நிவாரணமாக வழங்கினோம். பொதுஜன பெரமுன அரசே அதனை இல்லாமல் செய்தது. தற்போது பொருத்தமான பதவிகளுக்கு தகுதியான நபர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஆனால் பொலிஸ் ஆணைக்குழு மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழு உள்ளிட்ட ஆணைக்குழுக்களுக்கு கடந்த தேர்தல்களில் பொதுஜன பெரமுனவுக்கு ஆதரவாகச் செயற்பட்டவர்களே நியமிக்கப்பட்டுள்ளனர். எனவே மீண்டும் மீண்டும் கூறிய பொய்களையே கூறி மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்காமல், உடனடியாக பதவி விலக வேண்டும் - என்றார்.

(ஒ.4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பேராளுமை விடைபெற்றது

■ யோ.யோண்சன் ராஜ்குமார்



ஈழத்தின் முதுசமாகக் கொண்டாடக்கூடிய கூத்துமரபின் அண்ணாவிப் பரம்பரை என்பது படிப்படியாக விடைபெற்றுக் கொண்டிருப்பது மிகப்பெரிய வேதனையை அளித்து நிற்கின்றது. யாழ்ப்பாணத் தென்மோடிக் கூத்துமரபின் முதுசமாகத் திகழ்ந்த அண்ணாவியார் பேக்மன் ஜெயராஜா கடந்த மே மாதம் 28ஆம் திகதி ஊர் கூட முடியாத இடர்க் காலத்தில் காலமானார் என்ற செய்தி ஈழத்தின் நாடக உலகத்துக்கு ஒரு அதிர்ச்சியான செய்தியாகும்.

நீண்ட கால அனுபவங்களுடன், பூந்தான் யோசேப்பு, பக்கிரி சின்னத்துரை உள்ளிட்ட மூத்த அண்ணாவிமார்களோடும், பல இளைய அண்ணாவிமார்களோடும் இணைந்து பணியாற்றி தென்மோடிக் கூத்துமரபின் வகைமைக் குச் சான்று பகரக்கூடிய ஒரு சில அண்ணாவிமார்களில் முதன்மையானவராகத் திகழ்ந்ததுடன் திருமறைக் கலாமன்றத்தில் ஒரு கூத்துப் பாரம்பரியம் உருவாகவும் வளரவும் காரணமாக இருந்த இவரது இழப்பு ஈடுசெய்ய முடியாதது.




### கலையுலகப் பிரவேசம்

அருளப்பு பேக்மன் ஜெயராஜா என்ற இயற் பெயரைக் கொண்ட இவர் 1945 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 21ஆம் திகதி பிறந்தார். யாழ்ப்பாணம் பறங்கித் தெருவைப் பிறப்பிடமாகக் கொண்டவர். எழுபதுகளுக்குப் பின்னர் வளன்புரம் கொழும்புத்துறையை தனது வாழ்விடமாக்கிக் கொண்டார். கொழும்புத்துறை புனித யோசப் வித்தியாலயத்தில் கல்வி பயின்ற இவர் இளமையிலேயே சாரீர வளத்துடன் திகழ்ந்தார்.

இவரது பெரிய தகப்பனார் மரிசீலனும் சிறிய தந்தையார் சூசை மரியானும் நாவாந்துறையில் அண்ணாவிமார்களாகவும் கூத்துக் கலைஞர்களாகவும் திகழ்ந்தவர்கள். அத்தகைய பரம்பரையில் தோன்றிய இவர், சிறந்த சாரீர வளத்தைக் கொண்டிருந்தார். அந்தக் காலத்தில் புகழ் பெற்றிருந்த தென்னிந்தியப் பாடகர்களான தியாகராஜ பாகவதர், கண்டசாலா, சீர்காழி கோவிந்தராஜன் போன்றோர் பாடிய பாடல்களை நண்பர்களுடன் சேர்ந்து உச்ச தொனியில் பாடுவதைப் பொழுது போக்காக கொண்டிருந்தார்.

அதுமட்டுமன்றி மரண வீடுகளில் பாடப்படும் ஒப்பாரிப் பாடல்களையும் அண்ணாவிமார்களுடன் இணைந்து பாடி வந்தார். இவரது குரல் வளத்தைக் கண்ட நாவாந்துறையைச் சேர்ந்த அண்ணாவியார் வின்சன் டிபோல் அவர்கள் தனது 'யுவானியார்' நாட்டுக்கூத்தில் 'ஏரோடியாள்' பாத்திரத்தை வழங்கி நடிக்கச்செய்தார். அந்தக் கூத்து அவருக்குப் பெரும் புகழைத் தேடிக்கொடுத்தது. அவரது 21 வயதில் அவர் நடித்த அந்தக் கூத்தே அவரது கலையுலகப் பிரவேசமாக மாறியது.

### பூந்தான் யோசேப்புவுடன்

நாவாந்துறையில் யுவானியார் நாட்டுக் கூத்தில் நடித்த அவரது நடிப்புத் திறனையும் குரல் வளத்தையும் கண்ட, அந்தக் காலத்தில் புகழ்பெற்று விளங்கிய அண்ணாவியார் பூந்தான் யோசேப்பு இவரை தனது சங்கிலியன் நாட்டுக் கூத்தில் 'பரநிருபசிங்கன்' பாத்திரத்தை நடிப்பதற்கு அழைத்தார். அதில் நடித்த அனுபவமும் கிடைத்த பாராட்டும் இவருக்கு பூந்தான் யோசேப்புவின்பால் மதிப்பைக் கொண்டுவர அவரையே தனது குருவாகக் கொண்டு அவரது 'யாழ் நவரச நாட்டுக்கூத்துக் கலாமன்றத்தில்' இணைந்தார். பூந்தான் யோசேப்பு இறக்கும் வரை அவருடைய கூத்துக்களில் நடித்தது மட்டுமன்றி அவர் மேற்கொண்ட கூத்து நெறியாக்கங்களிலும், நிர்வாகப் பணிகளிலும் பக்கபலமாக இருந்தார்.

யாழ் நவரச நாட்டுக்கூத்துக் கலாமன்றத்தின்' செயற்றிறன் வாய்ந்த இளைஞனாகப் பணியாற்றியதுடன் அந்தக் காலத்தில் புகழ்பெற்றிருந்த அண்ணாவிமார்களான பக்கிரி சின்னத்துரை, சாமிநாதர், குணசிங்கம், பாவுலுப்பிள்ளை, இராசாத்தம்பி, அந்தோனிப்பிள்ளை, சுவாம்பிள்ளை, வின்சன் டிபோல், பெலிக்கான், பொன்னுத்துரை, செல்லையா, அருளப்பு, மனப்பு போன்ற கூத்தின் ஜாம்பவான்களாக கருதப்பட்ட பல அண்ணாவிமார்களையும் ஒன்றிணைத்து பூந்தான் யோசேப்பு பல கூத்துக்களைத் தயாரித்தார்.

பிற்காலத்தில் நவரச நாட்டுக்கூத்துக் கலாமன்றத்தின் இணைச் செயலாளராகவும் பணியாற்றினார். அந்தக் காலத்தில் சில்லாலை, இளவாலை, விளான், பலாலி, நாரந்தனை, கட்டக்காடு, மயிலிட்டி, குடாரப்பு, செம்பியன்பற்று, வெற்றிலைக்கேணி, ஒட்டகப்புலம், அச்சுவேலி என பல கிராமங்களுக்கும் சென்று கூத்துக்களை பூந்தான் யோசேப்புவுடன் சென்று பயிற்றுவித்தது மட்டுமன்றி அவர் பிரதேசக் கலைஞர்களுடன் நீண்டகாலமாகத் தொடர்புகளையும் பேணிவந்தார். அது மட்டுமன்றி இலங்கை வானொலியில் அக்காலத்தில் கூத்துக்கள் ஒலிப்பதிவு செய்து ஒலிபரப்பிய காலத்தில் பல கூத்துக்களில் நடித்தது மட்டுமன்றி அவற்றின் ஒலிப்பதிவுக்கும், வீ.ஏ. சிவஞானம், கே. எம். வாசகர், அ.தாசீசியஸ் போன்றவர்களுக்கு ஒத்துழைப்பு நல்கினார்.

### நடிப்புச் சிறப்பு

இனிமையான குரல் வளமும் உச்ச சுருதியில் பாடுந்திறனும் கொண்ட இவர் 'நாடகக்காரன்' பாத்திரங்களையே அதிகமாக நடித்தார். தென்மோடிக் கூத்துமரபில் பிரதான பாத்திரங்களை 'இராச பாத்திரம்' (ராஜபாட்), 'பெண் பாத்திரம்' (ஸ்திரி பாட்), 'நாடகக்காரன் பாத்திரம்' என வரையறுப்பர். நாடகக்காரன் பாத்திரம் ஏற்பவரின் சாரீர வளம் உச்ச சுருதியில் பாடுந்தன்மையில் அமைய வேண்டுமென்பதுடன் மிகவும் சிக்கலான சோக இராகங்களைப் பாட வல்லவராக இருக்கவேண்டுமென்றும் எதிர்பார்க்கப்பட்டது. அத்தகைய நாடகக்காரன் பாத்திரங்களையே அதிகம் ஏற்ற இவர் 'சங்கிலியன், கருங்குயில் குன்றத்துக் கொலை, மரியதாசன், எஸ்தாக்கியார், தேவசகாயம் பிள்ளை, விஜயமனோகரன், 'மனம்போல் மாங்கல்யம்'... போன்ற பல கூத்துக்களில் பூந்தான் யோசேப்புடனும் பல மூத்த அண்ணாவிமார்களுடனும் நடித்துப் புகழ்பெற்றார்.



### நெறியாளனாக..

பூந்தான் யோசேப்பு நெறிப்படுத்தும் கூத்துக்களில் உதவிப் பயிற்றுவிப்பாளனாக பல கூத்துக்களை நெறிப்படுத்தி வந்தவர். பின்னர் பல கிராமங்களிலும் பாடசாலைகளிலும் பல கூத்துக்களை நெறிப்படுத்தினார். மனம்போல் மாங்கல்யம், எஸ்தாக்கியார், தேவசகாயம் பிள்ளை, சங்கிலியன், யூலியசீசர், கருங்குயில் குன்றத்துக் கொலை, மனுநீதிச்சோழன், ஜெனோவா, சோழன் மகன், கம்பன் மகன், விஜய மனோகரன், அனைத்தும் அவரே போன்ற பல கூத்துக்களை நெறிப்படுத்தினார்.

திருமறைக்கலாமன்றத்தில் பூந்தான் யோசேப்பின் இறப்பின் பின்னர் திருமறைக் கலாமன்ற இயக்குநர் நீ. மரிய சேவியர் அடிகளின் அழைப்பை ஏற்று திருமறைக் கலாமன்றத்தில் இணைந்த இவர், நாட்டுக்கூத்துப் பிரிவில் அண்ணாவியார் அ. பாலதாசுடன் இணைந்து கூத்துக்களை நெறிப்படுத்தியதுடன் பல கூத்துக்களில் பிரதான பாத்திரம் ஏற்று நடித்தார். நீ ஒரு பாறை, அனைத்தும் அவரே, இரத்தக்கடன், இடமில்லை, கம்பன் மகன், தேவசகாயம்பிள்ளை, செந்தூது, சோழன் மகன் போன்ற பல கூத்துக்களில் நடித்தது மட்டுமன்றி நெறியாள்கையும் செய்தார்.

கூத்துக்கள் புதிதாக எழுதப்படவேண்டும் என்ற ஆர்வம் கொண்டிருந்த இவர் இளையோரைக் கொண்டு புதிய கூத்துக்களை எழுதுவிப்பதற்கு ஊக்கமாக இருந்தார். ம. சாம் பிரதீபனைக் கொண்டு 'சோழன் மகன்' கூத்தையும் யோண்சன் ராஜ்குமாரைக் கொண்டு 'கம்பன் மகன்' கூத்தினையும், அழகராசாவைக் கொண்டு 'வளையாபதி' கூத்தினையும் எழுதி மேடையேற்றியது மட்டுமன்றி அவற்றை நூலாகவும் பதிப்புச்செய்வித்தார்.

அதுமட்டுமன்றி இளம் அண்ணாவிமார்கள் உருவாக வேண்டும் என்ற பேரவாவில் திருமதி சாந்தி ரவீந்திரன், யோண்சன் ராஜ்குமார் போன்றவர்களை அண்ணவிமாராக பட்டமளித்து அவர்களின் தொடர் இயக்கத்துக்கு காரணமாக இருந்தார்.

### கூத்தை ஆவணமாக்குதல்

தென்மோடிக் கூத்துமரபின் அழநாதமாக இருக்கின்ற இசை மரபைப் பேணிப் பாதுகாக்கும் நோக்கோடு ஐந்து வருடங்கள் பெரும் முயற்சி செய்து, இந்தக் கட்டுரை ஆசிரியருடன் இணைந்து பணியாற்றி 158 பாடல் மெட்டுக்களையும் ஒலிப்பதிவு செய்து, அதன் இராக தாளங்களை இசைத்துறை விரிவுரையாளர் தவநாதன் றொபேட் அவர்களின் உதவியுடன் இற்றைப்படுத்தி யாழ்ப்பாணத் 'தென்மோடிக் கூத்துமரபின் இசைமெட்டுக்கள்' என்ற இசை இறுவட்டின் மூலமும் அதற்கான நூல் தொகுப்பின் மூலமாகவும் மிகப்பெரிய ஆவணமாக்கினார்.

அதுபோலவே கிறிஸ்தவ மரபுவழி ஒப்பாரிப் பாடல்களை 'வியாகுல இசைத்தருக்கள்' என்ற பெயரில் திருமறைக் கலாமன்றத்தின் ஊடாக ஒலிப்பதிவுசெய்து இறுவட்டாக வெளியீடுசெய்தார். பல கூத்து நூல்களை திருமறைக் கலாமன்றம் பதிப்புச்செய்வதற்கும் இவரது ஊக்கமே காரணமாக இருந்தது.

1997-1998 காலப்பகுதியில் திருமறைக் கலாமன்றம் 'வடலிக்கூத்தர் கலைப்பயணம்' என்ற பெயரில் மேற்கொண்ட ஐரோப்பிய கலைப் பயணத்தில் இணைந்து சென்று பிரான்ஸ் லண்டன், யேர்மனி, சுவிட்சர்லாந்து, ஹொலண்ட் போன்ற பல ஐரோப்பிய நாடுகளில் மரபுவழி நாடகங்களை நிகழ்த்திப் புகழ் ஈட்டி மீண்டார்.

கலையிலும் பண்பாட்டிலும் பற்றுக்கொண்ட அர்ப்பணிப்புடன், இறக்கும் வரை இடையறாது செயற்பட்டுவந்த, தம்மை சமூகத்துக்கு கையளித்த பெரும் விருட்சங்களை ஈழமண் இழந்து கொண்டிருப்பது வேதனைக்குரியது. அதுவும் இந்த இடர்கால ஊரடங்கில் அவர்களது இழப்புக்களும் பேசப்படாமல் போவது மிகுந்த வேதனையை அளிக்கின்றது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## உடல் குறைய!!!

ஒரு டம்ளர் சுடுதண்ணீரில் 1 ஸ்பூன் மிளகு தூள் மற்றும் சிறிதளவு கல் உப்பு சேர்த்து கலந்து குடித்து வந்தால் உடல் எடை குறைவதை 2 நாள்களிலேயே உணர்வீர்கள். இதனை தினமும் ஒரு முறை மட்டும் குடிக்கவும்.



## முகப்பரு மறைய....

முகப்பருவை கிள்ளக்கூடாது. பச்சைப்பயறு மாவை அரைத்து வைத்துக்கொண்டு தினமும் இரவில் பருவின் மேல் பூசி வைத்து காய்ந்ததும் கழுவி விட வேண்டும். இவ்வாறு செய்தால் விரைவில் பரு மறைந்து விடும். பருக்கள் வந்துவிட்டால் க்ரீம் ஜெல் என எதுவும் தேவையில்லை. ஐஸ் கட்டிக்களை எடுத்து பருக்கள் உள்ள இடத்தில் வைத்து மசாஜ் செய்து வந்தாலே போதும் பருக்கள் வேகமாக மறைய ஆரம்பிக்கும்.



## அப்பிளில் இருக்கு 10 இரகசியம்

1. இதயத்தை ஆரோக்கியமாக பராமரிக்கின்றது.
2. எடை கட்டுப்பாட்டுக்கு உதவுகிறது.
3. நீரழிவின் ஆபத்தை குறைக்கிறது.
4. எந்த நோயும் அண்டவிடாது.
5. மலச்சிக்கல் விடுவிக்கப்படுகிறது.
6. நச்சுக்கள் நீக்க உதவுகிறது.
7. கொழுப்பு குறைக்கிறது.
8. புற்றுநோயை தடுக்க உதவுகிறது.
9. எலும்பு பலவீனமாவதை தடுக்கிறது.
10. நல்ல குடல் பக்டீரியாவை செயலூக்கம் செய்கிறது.

## பெண்களின் மீசையை போக்க....

மஞ்சள் செடியின் இலைகள் 10 எடுத்து வெயிலில் நன்கு காய வைத்து இடித்துத் தூளாக்கி அத்துடன் 30 மில்லி தேங்காய் எண்ணெய்யை கலந்து வைத்துக்கொண்டு தினமும் இரவு இந்த எண்ணெய்யை முடி வளர்ச்சியுள்ள இடத்தில் நன்கு தேய்த்து காலையில் குளித்து விடவும். இரண்டு அல்லது மூன்று நாள்களில் முடிகள் உதிர்ந்து விடும் பிறகு முளைக்காது.

# இன்றைய தலைமுறையினரின் தவிர்க்க முடியாத பிரச்சினைகளுக்குத் தீர்வு

இன்றைய தலைமுறையினரின் வாழ்வியல் மாற்றங்களால், 30 வயதைக் கடந்த பெரும்பாலானவர்கள் பல உடல் ரீதியான பிரச்சினைகளைச் சந்திக்கின்றனர்.

உண்ணும் உணவே மருந்து என்பதற்கேற்ப, நாம் அன்றாட உண்ணும் உணவின் மூலம் இவ்வகை உடல் நலக்குறைகளை தவிர்க்கவோ, அதன் வீரியத்தை கட்டுப்படுத்தவோ முடியும்.



**தைரொய்ட்:**

ஆண்களை விட பெண்களுக்குத்தான் தைரொய்ட் பிரச்சனை அதிகம் வருகிறது. ஒரு சில பெண்கள் தங்களது வாழ்நாளில் தைரொய்ட் பிரச்சினைகளை சந்திக்கின்றனர். தைரொய்ட் சுரப்பியில் சுரக்கும் ஹோர்மோன் அளவு அதிகமானாலும் குறைந்தாலும் அது நம் உடல் நலத்தை பாதிக்கும். தைரொய்ட் சுரப்பி சீராக இயங்க அயோடின் ஒரு பெரும் பங்கு வகிக்கிறது பால் பொருள்கள், கோழி, மாட்டிறைச்சி, பன்றி இறைச்சி, மீன் மற்றும் உப்பு போன்றவைகளில் அயோடின் அதிகமாக உள்ளது. தைரொய்ட் ஹோர்மோன் உற்பத்தியை சமநிலையில் வைத்திருக்க சரியான அளவு அயோடின் தேவைப்படுகிறது. அயோடின் சப்ளிமெண்ட்ஸ் எடுத்துக் கொள்வதற்கு முன் உங்கள் மருத்துவருடன் கலந்துரையாடி எச்சரிக்கையுடன் பயன்படுத்தவும்.

சில உணவுகளில் தைரொய்ட் ஹோர்மோன் உற்பத்தியைக் குறைக்கக்கூடிய கோட்ரோஜன்கள் உள்ளன. அவற்றுள் காலிஃபிளவர், ப்ரோக்கோலி, முட்டைக் கோஸ், முள்ளங்கி ஆகியவை அடங்கும். ஹைப்போ தைரொய்டிசம் உள்ளவர்கள் இந்த உணவுகளை குறைந்த அளவு எடுத்துக் கொள்ளுதல் அல்லது முற்றிலும் தவிர்த்தல் நல்லது.

**பி.சி.ஓ.எஸ் சினைப்பை நீர்க்கட்டிகள்:**

தைரொய்ட் பிரச்சினை இருக்கும் பெண்கள் சந்திக்கும் ஒரு பொதுவான பாதிப்பு பி.சி.ஓ.எஸ் (PCos) எனும் சினைப்பை நீர்க்கட்டிகள். முறையான உடற்பயிற்சி, சரியான உணவு பழக்கவழக்கம் மேற்கொள்ளுதல் மூலம் இத்தகைய பாதிப்பு வராமல் தவிர்க்க முடியும்.

**உயர் இரத்த அழுத்தம்:**

இதய நோய்கள் அல்லது உயர் இரத்த அழுத்தம் உள்ளவர்கள் அதிக கொழுப்பு மற்றும் மாச்சத்துள்ள உணவை அளவோடு உண்ணுதல் நல்லது. ஒருவருக்கு உயர் இரத்த அழுத்தம் இருந்தால், அவர் உண்ணும் உப்பின் அளவை விட அவர் உட்கொள்ளும் கார்போஹைட்ரெட்டின் அளவு மற்றும் தரத்தை கவனிப்பது முக்கியம்.

இயற்கையாகவே உணவுகளில் சிறிய அளவில்தான் சோடியம் இருக்கும் , ஆனால் உணவு தயாரித்தல் மற்றும் பதப்படுத்தும்போது சேர்க்கப்படுகிற . சோடியத்தின் அளவு பெரும்பாலும் அதிகமாக இருக்கும் ஏனெனில், இது உணவு கெட்டுப் போகாமல் இருக்க சேர்க்கப்படுகிறது.

ஆகவே டின்கள் மற்றும் பக்கெற்றில் அடைக்கப்பட்ட உணவை தவிர்த்தல் அவசியம்.

பொட்டாசியம், உடலில் உள்ள அதிகப்படியான சோடியத்தை சிறுநீர் மூலம் வெளியேற்ற உதவுகிறது. இது உங்கள் இரத்த அழுத்தத்தை குறைக்கிறது. வாழைப்பழம், பால் கீரைகளில் பொட்டாசியம் நிறைந்துள்ளது.

நுரையீரலின் ஆரோக்கியத்துக்கு இந்த ஐந்து உணவுகளை அவசியம் சாப்பிடுங்கள்.

பச்சை காய்கறிகள் , கீரைகள், பழங்கள், பாதாம், கோழி இறைச்சி, மீன், பருப்பு வகைகள் மற்றும் பயறு போன்ற தாவர புரதங்கள், வெந்தயம் போன்றவைகளை தங்கள் உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

பேஸ்ட்ரிகள், வெள்ளை ரொட்டி, பிஸ்கட், சர்க்கரை பானங்களான சோடாக்கள் மற்றும் எனர்ஜி பானங்கள் மற்றும் ஜங்க்ஃபுட் போன்றவற்றை தவிர்த்தல் வேண்டும். முடிந்தவரை இனிப்பு , மாச்சத்துள்ள உணவுகளைக் குறைத்து நார்ச்சத்துள்ள உணவை உட்கொள்வதை பழக்கமாக்கிக் கொள்வது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலன் மில்லினால் தயாரிக்கப்பட்ட சுத்தமான கலப்படமற்ற தேங்காய் எண்ணெய் சில்லறையாக பெற்றிட நாடவேண்டிய ஒரே இடம்.

**பாலன்மில்**

தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய் ஆலை,
கொப்பறா, எள், இலுப்பைப் பருப்பு (விதைகோது உடைத்து) சூரியகாந்தி விதை போன்றவற்றை 3Kg முதல் 3000Kg வரை தனித்தனி இயந்திரத்தில் அரைத்து எண்ணெய்யாக உடன் ஊற்றித்தரப்படும்.

மாவடிச் சந்தி, வட்டுக்கோட்டை.
021 321 2624

# பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு தொற்று உறுதி!

வடமராட்சி, ஜுன் 28

நெல்லியடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.

நெல்லியடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நேற்றுப் பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்குச் சென்று பி.சி.ஆர். சோதனைக்கு மாதிரிகளை வழங்கியுள்ளார்.

இதையடுத்தே அவருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. (ம-26)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



பிறந்த திகதி
28.06.1961

ஓய்வுபெறும் திகதி
28.06.2021

**திருமதி சுகந்தா கிருபானந்தராஜா**

பயிற்றப்பட்ட கணித ஆசிரியர் - தரம் 1

சேவை விபரங்கள்:
- போல லான ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி -(1985.08.05-1985.08.25) நீர்கொழும்பு
- நு/சரஸ்வதி தமிழ் மகா வித்தியாலயம், லிந்துல - (01.1 85 - 12.02.1988)
- யா/பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி - (15.02.1988 - 30.12.1989)
- நு/சரஸ்வதி தமிழ் மகா வித்தியாலயம் - (01.01.1990 - 30.04.1992)
- யா/இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம்- (01.05.1992 - 22.04.2010)
- யா/பிரான்பற்று க்லைமகள் வித்தியாலயம்-(21.04.2010-27.06.2021)

முப்பத்தாறு வருடங்கள் மகத்தான ஆசிரியர் பணிதனை நிறைவாய் செய்து இன்று ஓய்வுபெறும் எமது பாட சாலையின் ஆசிரியர் திருமதி சுகந்தா கிருபானந்த ராஜா அவர்களின் ஓய்வுகால வாழ்வு வளமாக அமைய வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர்:
பாடசாலைச் சமூகம்
யா/பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம்
பண்டத்தரிப்பு

**தொலைந்துவிட்டது**

நவரத்தினம் சுகுமார் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை, ஓய்வூதியர் அடைய ..ா அட்டை, சாரதி அநுமதிப்பத்திரம், வங்கி அட்டை ஆகியன கே.கே.எஸ். வீதியில் இணு விலுக்கும் தெல்லிப்பளை ஊடாக அம்பனைச் சந்திக்கும் இடைப்பட்ட பகுதியில் தவறவிடப் பட்டுள்ளன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து தொடர்பு கொள்ளவும். தகுந்த வெகுமதி வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: 071 6136 546

# விபத்தில் முதியவர் இறப்பு!

யாழ்ப்பாணம், ஜுன் 28

மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டு 80 வயதுடைய முதியவர் ஒருவர் உயிரிழந்தார். ஊர்காவற்றுறையைச் சேர்ந்த செபஸ்டியான்பிள்ளை டேவிட் என்பவரே உயிரிழந்தவர்.

கடந்த 21ஆம் திகதி தண்ணீர் எடுத்துக்கொண்டு சென்றபோது நேர்எதிரே வந்த மோட்டார் சைக்கிள் அவரை மோதியுள்ளது.

மயக்கமடைந்த நிலையில் அவர் உடனடியாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

எனினும் சிகிச்சை பயனளிக்காமல் நேற்று உயிரிழந்தார்.

இறப்பு விசாரணைகளையாழ்ப்பாணம் போதனாமருத்துவமனையில் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (ம-26)

**மணி விழா வாழ்த்து**




**திரு. பத்மநாதன் தெய்வேந்திரன்**

சேவைக்காலம்
05.08.1998 – 27.06.2021

எமது பாடசாலையில் 23 ஆண்டுகள் காவலாளியாக கடமையாற்றி 27.06.2021 இல் இருந்து பணி ஓய்வு பெற்று இன்று மணிவிழாக் காணும் திரு. பத்மநாதன் தெய்வேந்திரன் அவர்களை ஓய்வு காலத்தில் சீரும் சிறப்புமாக வாழ மனதார வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர்:
பாடசாலை சமூகம்
யா/ டிறிபேர்க் கல்லூரி

**அகவை அறுபது காணும் மணிவிழா நாயகியை வாழ்த்தும்**
**ஒல்லுடை ஞான வைரவராலய பரிபாலன சபை**



ஒல்லுடை ஞானவைரவர் ஆலய
பொருளாளரும், யா/பிரான்பற்று
கலைமகள் வித்தியாலய
உப அதிபருமாகிய

**திருமதி சுகந்தா கிருபானந்தராஜா**
(Trained Maths - Grade I)

அகவை அறுபது நிறைவு காணும்
**திருமதி சுகந்தா கிருபானந்தராஜா**
ஆசிரியைக்கு

**மணிவிழா வாழ்த்து**

கல்வி அறிவு ஒழுக்கம் கடமை உணர்வுடைய
நல்லாசிரியையென நாடு புகழ் பெற்றனை நீர்
ஒல்லுடையான் கோயிலுக்கு உத்தம பொருளாளராய்
நல்லருள் பெற்று நற்பணி செய் பேறுபெற்றீர்
எல்லார்க்கும் உதவுகின்ற கிருபானந்த ராஜாவின்
இல்லத்தரசியார் ஊர்சிறக்க உழைத்திட்டீர்
பல்லாண்டு காலம் மனமகிழ்ந்து வாழியவே



**சேவை விபரங்கள்:**

கல்விச் சேவையில் 36 ஆண்டுகள்
முதல் நியமனம் - 1985.08.05
- போலவலான ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி - நீர்கொழும்பு (1985.08.05-1985.08.25)
- நுவ/சரஸ்வதி தமிழ் மகா வித்தியாலயம் (1985.10.01 - 1992.04.30) - 07 ஆண்டுகள்
- யா/பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி (1988.02.15 - 1989.12.30)
- யா/இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம் (1992.05.01 - 2010.04.22) - 18 ஆண்டுகள்
- யா/பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம் (2010.04.23 - 2021.06.27) - 11 ஆண்டுகள்

**சமூகப்பணியின் தடங்கள்:**

25 ஆண்டுகள் பொருளாளராக ஒல்லுடை ஞானவைரவர் ஆலய பரிபாலன சபையில் இறைபணி
20 ஆண்டுகள் ஒல்லுடை அறநெறி பாடசாலை பொறுப்பாசிரியராக இருந்து ஆன்மீகப்பணி
நல்லாசிரியராக, உப அதிபராக, சமூக சேவகியாக, ஆலய அறப்பணியாளராக, கணவர் திரு. கிருபானந்தராஜாவுடன் இணைந்து எம் ஆலய வளர்ச்சிக்கும், கிராம முன்னேற்றத்திற்கும், மாணவர்களின் கல்வி, ஆன்மீகம்சார் உயர்வுக்கும் உழைத்திட்ட அமைதி, பொறுமை, நற்பண்புகளை தனதாக்கிகந்த 25 வருட காலத்தில் அருள்மிகு ஒல்லுடையானுக்கு இரண்டு தடவை மகா கும்பாபிஷேகம் நிகழ்த்தி மணிவிழா காணும் பெருமாட்டி மதிப்பின் திருமதி சுகந்தா கிருபானந்த ராஜா அவர்கள் அருள்மிகு ஒல்லுடை ஞானவைரவர் அருளாட்சியில் வளமும் நலமும் நிறைந்து வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
ஒல்லுடை ஞானவைரவர் ஆலய
பரிபாலன சபையினர்,
காடிவளை-இளவாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
31
12
1937



மறைவு
27
06
2021

## மருதபிள்ளை அரசமணி

இல.303, ஆடியபாதம் வீதி, நாயன்மார்கட்டை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மருதபிள்ளை அரசமணி அவர்கள் நேற்று (27.06.2021) ஞாயிற்றுக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமணி சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா லட்சுமிதம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ் சென்ற மருதபிள்ளையின் அன்பு மனைவியும், கோமதியம்மா (யாழ் போதனா வைத் தியசாலை ஓய்வுபெற்றவர்), உதயகுமார் (இ.மி.ச யாழ்ப்பாணம், ஓய்வுபெற்றவர்), சாந்தகுமாரி, பாலகுமார், ஜெயக்குமார், சிவகுமார் (ஜேர்மனி), நவநீதன் (கனடா), காலஞ்சென்ற திருக்குமாரி, நிபுலராஜ் (கட்டார்) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெயக்குமார், வசந்தா, யோகராஜா, றெஜீனா, லோஜினி (யாழ் போதனா வைத்திய சாலை), வரதலட்சுமி (ஜேர்மனி), நேசமலர் (கனடா), சாதனா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்ற ராசமலர் மற்றும் DR.ராஜரட்ணம், இரத்தினதேவி, சின்னத்துரை ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், விதுரன் மற்றும் மதுஷா (ஜேர்மனி), நிலோபா, பிரதீபன் அஜந்தன், ஜனார்த்தனன் (சுவிஸ்), தேனுஜன், பிரவீனன், விதுர்ஷினி, கவிநயா, புவிந்தா, சிவேஸ், வினேஸ், ஆகாஸ், தர்ஷான், தர்ஷி, டிறோண், ஆரோன், அஜய், லக்சிகன் ஆகியோரின் அன்பு பேர்த்தியாரும், கிருத்தீஸ், ஆத்தீஸ், நிதஸ்கர் ஆகியோரின் அன்புப் பூட்டியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (28.06.2021) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**303, ஆடியபாதம் வீதி, நாயன்மார்கட்டு,**
**0777 298 060 (உதயன்)**
**077 169 7331 (ஜெயம்)**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

தோற்றம்
21
12
1942



மறைவு
27
06
2021

## பொன்னம்பலம் விஸ்வலிங்கம் JP

(கிளிநொச்சி வர்த்தகர் )

யாழ்.காரைநகர் களபூமியைப் பிறப்பிடமாகவும் பனிக்கர் வீதி, திருநெல்வேலியை வதிவிடமாக வும் கொண்ட பொன்னம்பலம் விஸ்வலிங்கம் அவர்கள் 27.06.2021 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் செல்லம்மா தம்பதிகளின் அன்புமகனும், காலஞ்சென்ற மார்க்கண்டு தவமணி தம்பதிகளின் அன்பு மருமகனும், பவானி அவர்களின் அன்புக் கணவரும், பிரபாகரன் (UK), கருணாகரன் (SL), குமுதினி (UK) நந்தகுமார் (UK), சிவகுமார் (UK) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் ஆவார்.

கீதாபாலா, தேவநாயகி, சாந்தகுமார், நிஷாந்தினி, மரியா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், விஜித்தா, பிரியா, பிரகீதன், ஹரணியா, டினுசன், மாதேஷ், ஆகாஷ், அபினையா, நதீஷ், கரிஷ்னு, இலக்கியா, டனுயன், டனுஷா, டினுஷா ஆகியோரின் அன்பு அப்பப்பாவும் ஆவார். காலஞ்சென்றவர்களான பூமனி, நடராஜா, கிருஷ்ணபிள்ளை ஆகியோரும் சரஸ்வதி, சிவபாக் கியம், கந்தசாமி, லோகேஸ்வரன், லலிதாம்பிகா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் நேற்று பிற்பகல் 1 மணிக்கு நடைபெற்று 3 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட் டுக் கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்**
**077 8395444, 0778249234**

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

**தோற்றம்**
**01.10.1951**

**மறைவு**
**21.06.2019**

கடந்த (21. 06. 2019) வெள்ளிக் கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர்

## செல்லையா சிவலிங்கம்

**திதி : சதுர்த்தி (28.06.2021)**



அவர்களின் இரண்டாம் ஆண்டு நிகழ்வு இன்று (28.06.2021) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வருக்கும் அறியத்தருகின்றோம்.

**இல.55,**
**அம்பலவாணர் வீதி,**
**அத்தியடி,**
**யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்.**
**077376 8952**

மைதிலி நகை மாடம் (Pvt)Ltd
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முல்லைத்தீவு மாவட்டத்தில். முள்ளிவாய்க்கால் மேற்கு. கொக்கிளாய், கருநாட்டுக்கேணி, கொக்குதொடுவாய் மற்றும் கணுக்கேணி ஆகிய பிரதேசங்களில் உள்ள அதிக அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்கள் மற்றும் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் என அடையாளம் காணப்பட்ட 60 குடும்பங்களுக்கு வட மாகாண முன்னாள் விவசாய அமைச்சர் க.சிவனேசன் ஏற்பாட்டில் உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ப-13)

### அமைச்சர் நாமலுடைய நிகழ்வில்

# சுகாதார நடைமுறைகளை பின்பற்றத் தவறிய ஆளுநர்

யாழ்ப்பாணம், ஜூன் 28

யாழில் அமைச்சர் நாமல் ராஜபக்ச கலந்து கொண்ட யாழ் மத்திய கல்லூரி மற்றும் யாழ் கலாச்சார மண்டப நிகழ்வுகளில் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸ் சுகாதார நடைமுறைகளை பின்பற்றாமல் கலந்து கொண்டமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ச யாழ்ப்பாணம் வருகை தந்த நிலையில் பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொண்டிருந்தார். இந்த நிகழ்வுகளிலேயே வடக்கு ஆளுநர் குறைந்த பட்சம் மாஸ்க்கூட அணியாமல் கலந்துகொண்டார்.



பொதுமக்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்றும் பொது மக்களின் பொறுப்பற்ற நடவடிக்கைகளே நாட்டில் கொரோனா மூன்றாவது அலை தீவிரம் பெற்றுள்ளது என்றும் நாட்டின் ஜனாதிபதி உள்ளிட்ட பலரும் குற்றஞ்சாட்டிவரும் நிலையில் பொறுப்புள்ள அதிகாரிகள் அதுவும் அரச உயர்மட்ட நிகழ்வுகளில் இவ்வாறு சுகாதார நடைமுறைகளை மீறுவது விமர்சனத்துக்கு உள்ளாகியுள்ளது. (ம-20)

## நாட்டில் நேற்றும் 1,867 தொற்று

நாட்டில் நேற்றும் 1,867 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் நேற்றிரவு அறிவித்துள்ளது. இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 லட்சத்து 53 ஆயிரத்து 618ஆக அதிகரித்துள்ளது. கொரோனாவிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 18 ஆயிரத்து 998ஆக உயர்வடைந்துள்ளது. இதேவேளை. கொரோனாத் தொற்று காரணமாக வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 31 ஆயிரத்து 676ஆக அதிகரித்துள்ளது எனவும் அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ம-22)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

ஈழத்தின் தென்மோடிக்கூத்து மரபின் புகழ்பூத்த அண்ணாவியாரும், திருமறைக் கலாமன்றத்தின் நிர்வாகசபை உறுப்பினரும், நாட்டுக்கூத்துப் பிரிவின் பொறுப்பாளருமாகிய

பிறப்பு 21 . 10 . 1945



இறப்பு 28 . 05 . 2021

அமரர் கலாபூஷணம்

**அருளப்பு பேக்மன் ஜெயராஜா**

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைச் செலுத்துவதுடன், அவரது ஆன்ம இளைப்பாற்றிக் காகவும் வேண்டிநிற்கின்றோம்.

இயக்குநர்கள்,
அங்கத்தவர்கள்,
திருமறைக் கலாமன்றம்.

## மரண அறிவித்தல்



**திருமதி கஜராஜினி வசிகரன்**

(முகாமைத்துவ உத்தியோகத்தர் வேலணை பிரதேச சபை)

பிறப்பு 21.05.1988 — இறப்பு 26.06.2021

வேலணை 1ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் வேலணை கிழக்கு 2ம் வட்டாரம் செல்வநாயகம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கஜராஜினி வசிகரன் (முகாமைத்துவ உத்தியோகத்தர். வேலணை பிரதேச சபை) அவர்கள் கடந்த (26.06.2021) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் வசிகரனின் அன்பு மனைவியும், இராஜகோபால். காலஞ்சென்ற அல்லிமலர் தம்பதியரின் பாசமிகு மகளும் வரதராசா காலஞ்சென்ற மணிமேகலை தம்பதியரின் அன்பு மருமகளும், ரஸ்மினா, ரட்ஷகன், ஷர்ஷிகா ஆகியோரின் பாசமிகு தாயாரும், வசீகஜன் (கஜமுகன் ஹாட்வெயார் வேலணை), கஜீபன். கானுசன் ஆகியோரின் மைத்துனியும், திருமதி கஜாந்தி வசீகஜனின் (ஆசிரியர் யா/நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட மகா வித்தியாலயம்), உடன் பிறவா சகோதரியும், தஸ்வின், மதுரிகா ஆகியோரின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.06.2021) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 2.00 மணியளவில் சாட்டி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



**திருமதி மனோரஞ்சிதன் விக்கினேஸ்வரி**

மானிப்பாய் இராஜகாரியர் வீதியை பிறப்பிடமாகவும். வட்டுக்கோட்டை மூளாய் வீதியை (விளாத்தித்தி தோட்ட வீதி) வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மனோரஞ்சிதன் விக்கினேஸ்வரி அவர்கள் நேற்று (27.06.2021) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை பூரணம் தம்பதியரின் அன்பு மகளும். காலஞ்சென்ற முத்துத்தம்பி சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், அமரர் மனோரஞ்சிதன் அவர்களின் பாசமிகு மனைவியும், அமரர் லோகநாதனின் அன்புச் சகோதரியும், சிறிதயனி. சிறிமதனி. சிறிரஞ்சினி. சிறிமனோகரி. சிறிவினோதினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், சபேசன். ஜெனீஸ்கரன். கேசவன் (கிளை முகாமையாளர் - யாழ்கோ சித்தங்கேணி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கிருஸ்ணவி. லதுஷன். சாய்ரா. அக்ஷனா. அபிஷனா. திவ்யா. கஜானா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.06.2021) திங்கட்கிழமை காலை 7.00 மணிக்கு மூளாய் வீதியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மூளாய் வீதி,
(விளாத்தித்தோட்ட வீதி),
வட்டுக்கோட்டை.

தகவல்: குடும்பத்தினர்.
077 677 9711
077 930 0089

## மரண அறிவித்தல்



**சம்பந்தன் பகீதரன்** (வசந்தன்)

யாழ்ப்பாணம், குப்பிளான் தெற்கை பிறப்பிடமாகவும் இத்தாலியை வதிவிடமாகவும் கொண்ட சம்பந்தன் பகீதரன் (வசந்தன்) அவர்கள் கடந்த (26.06.2021) சனிக்கிழமை இத்தாலியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சம்பந்தன் சாரதாதேவி தம்பதியரின் மகனும், கனகரட்ணம் தயாநிதி தம்பதியரின் மருமகனும், சயந்தியின் பாசமிகு கணவரும், அவநீசன், அர்ச்சிதன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஶ்ரீதரன் (கனடா), கங்காதரன் (கனடா), தயாவதி, தயாளினி, காலஞ்சென்ற சக்திதரன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், நந்தினி, குலநிதி, சதீஸ்குமார், சந்திரகுமார், காயத்திரி, திஸாகரன் ஆகியோரின் மைத்துனரும், கேதீஸ்வரன், சுபோதினி ஆகியோரின் சகலனும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

V.T.S. வீதி,
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

தகவல்: குடும்பத்தினர்.
தயாளினி - 075 830 5095
திஸாகரன் - 077 967 2276


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசுக்கு...

'ஆதவன்' நாளிதழுக்கு வழங்கிய குறுகிய நேர்காணலிலேயே அவர் இந்த அழைப்பை விடுத்தார்.

நாட்டிலுள்ள வளங்கள் விற்பனை செய்யப்படுவதற்கு எதிராகவும், அதனை தடுத்து நிறுத்தும் நோக்கிலும் தற்போதைய அரசுக்கு எதிராக இவ்வாரம் நீதிமன்றத்தை நாடுவதற்கும் உத்தேசித்துள்ளோம். இதற்கான சட்டபூர்வ ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே நாட்டு வளங்களைப் பாதுகாப்பதற்காக தமிழ் மக்களும் ஒன்றிணைய வேண்டும் என்ற அறைகூவலை அவர் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் தேரர் மேலும் தெரிவிக்கையில்,

'காலனித்துவ ஆட்சியிலிருந்து இலங்கைக்கு சுதந்திரம் பெற்றுக்கொடுப்பதற்கு இன, மத, மொழி பேதங்களுக்கு அப்பால் தமிழ், சிங்கள, முஸ்லிம் மற்றும் கிறிஸ்தவ தலைவர்கள் அன்று ஒன்றிணைந்து போராடினார்கள். டி. பி.ஜாயா, சேர்.பொன்னம்பலம் இராமநாதன், சேர் பொன்னம்பலம் அருணாச்சலம் மற்றும் டி.எஸ்.சேனாநாயக்க ஆகியோர் இணைந்து போராடினர். நாட்டு மக்களும் இனங்களைச் சேர்ந்த மக்களும் ஓரணியில் திரண்டு செயற்பட்டனர்.

தற்போது எமது நாட்டுக்கு மீண்டுமொரு முறை சுதந்திரம் பெற்றுக்கொடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதால் தமிழ், சிங்கள, முஸ்லிம் மற்றும் கிறிஸ்தவ மக்கள் ஒன்றுபடவேண்டும். நாட்டு வளங்கள் தொடர்ச்சியாக கொள்ளையடிக்கப்பட்டால் அவற்றை தடுத்துநிறுத்தி, நாட்டை மீட்பதற்காக இன்னுமொரு சுதந்திர போராட்டத்தை மேற்கொள்ள வேண்டியிருக்கின்றது. அதற்கு தமிழ் மக்களின் முழுமையான ஒத்துழைப்பும் அவசியம். யாழ்ப்பாணம் உட்பட வடக்கிலுள்ள வளங்களும் இன்று விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. எனவே, எமது நாட்டு வளங்களை பாதுகாப்பதற்கு இலங்கை தாயின் பிள்ளைகளாக தமிழ் இளைஞர்களும் முன்வரவேண்டும் என்ற அழைப்பை விடுக்கின்றேன்' - என்றார். (ம-44,22)

## இந்திய....

கூடும். எனவே, இந்திய மீனவர்களின் அத்துமீறல் வடபகுதியில் உடன் நிறுத்தப்பட வேண்டும் இவ்வாறு வலியுறுத்தினார் தொற்று நோய்கள் மற்றும் கொரோனா கட்டுப்பாட்டு இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே. அவர் மேலும் தெரிவிக்கையில்,

'இந்தியாவில் பெருந்தொற்றாக உருவெடுத்த டெல்டா கொரோனா வைரஸ் இன்று இலங்கை உள்ளிட்ட 85 நாடுகளுக்குப் பரவியுள்ளது. இந்த வைரஸ் தொற்றை ஆரம்பத்திலேயே நாம் கட்டுப்படுத்த வேண்டும். இல்லையேல் இலங்கை முழுவதும் இந்த வைரஸ் பரவக்கூடும். அப்படியான நிலைமை ஏற்பட்டால் நாளாந்தம் ஆயிரக்கணக்கான உயிரிழப்புகள் இங்கு பதிவாகும். இந்தியா போன்று இலங்கையிலும் பிணங்கள் தான் குவியும். பேராபத்து மிக்க இந்த டெல்டா வைரஸ் தொற்று தொடர்பில் இலங்கை மக்கள் அலட்சியமாக இருக்கக்கூடாது.

வடபகுதியில் இந்திய மீனவர்களின் ஆக்கிரமிப்பு அதிகரித்துள்ளது. அவர்கள் ஊடாகவும் டெல்டா வைரஸ் இலங்கையில் மேலும் பரவக்கூடும். எனவே, இந்திய மீனவர்களின் ஆக்கிரமிப்பு வடபகுதியில் உடன் நிறுத்தப்பட வேண்டும். கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லும் இலங்கை மீனவர்கள், இந்திய மீனவர்களுடன் தொடர்பு வைத்திருப்பதைத் தவிர்க்க வேண்டும்' -என்றார். (ம-22)

## கிளிநொச்சியில்...

யில் இந்த விபத்து சம்பவித்துள்ளது.

வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வாய்க்காலுக்குள் விழுந்ததன் காரணமாக இந்த விபத்து சம்பவித்துள்ளது என்று தெரியவருகின்றது. சடலம் மீட்கப்பட்டு கிளிநொச்சி மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-214,6,26)

## குப்பைகளை...

வால் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

ஜப்பான் நாட்டின் ஜெய்க்கா நிறுவனத்தின் உதவி மூலம் உருவாக்கப்பட்ட இந்த தொழிற்சாலையால் ஒரு நாளைக்கு 50 ஆயிரம் கிலோ உரத்தை உருவாக்க முடியுமென தெரிவிக்கப்படுகிறது. கரவெட்டி பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட இந்த தொழிற்சாலை மூலம் அருகிலுள்ள பிரதேச சபைகளின் கழிவகற்றல் பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது.

நேற்று மாலை 4 மணிக்கு கரவெட்டி பிரதேச சபை தவிசாளர் ஐங்கரன் தலைமையில் இடம்பெற்ற திறப்பு விழாவில் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் நாமல் ராஜபக்ச, இராஜாங்க அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களான அங்கஜன் இராமநாதன், எம்.ஏ.சுமந்திரன் மற்றும் த.சித்தார்த்தன் ஆகியோர் உள்ளிட்டவர்களும் கலந்துகொண்டனர். (ம-26)

## அரசியல் கைதியான...

னர். வடமராட்சியில் நேற்று சேதனக் குப்பைகளை இயற்கை உரமாக மாற்றும் தொழிற்சாலை திறந்து வைக்கப்பட்டது. இதில் அமைச்சர் நாமல் ராஜபக்சவும் கலந்துகொண்டார். இந்த நிகழ்வில் வைத்தே அமைச்சரிடம் மேற்படி கோரிக்கையை ஆனந்த சுதாகரின் மகன் மற்றும் மகள் ஆகியோர் முன்வைத்தனர். (ம-26)

## அரசியல்...

இது தொடர்பில் அவர்கள் வழங்கியுள்ள மனுவில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி அமைச்சர் நாமல் ராஜபக்ச நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரை மிகுந்த நம்பிக்கையை ஏற்படுத்தியது. இதையடுத்து ஜனாதிபதியும் 16 அரசியல் கைதிகளை விடுவித்து மேற்கொண்ட நடவடிக்கையை மெச்சுகின்றோம்.

உண்மையில் ஆட்சி அதிகாரத்தில் அமர்ந்திருக்கின்ற அரசாங்கம் சிறையில்வாடும் எமது உறவுகளின் வேதனையையும் அவர்களைப் பிரிந்து தவிக்கும் எமது கண்ணீரையும் புரிந்துகொண்டுள்ள விடயமானது எம் மனங்களில் நம்பிக்கையை விதைத்துள்ளது.

விடுதலை நாள்களை அண்மித்து சிறிய தண்டனைகளை அனுபவித்து வந்திருந்த ஒருபகுதி அரசியல் கைதிகள் மாத்திரமே விடுவிக்கப்பட்டிருப்பினும் இதை ஒரு ஆரோக்கியமான முன்னெடுப்பாகவே நாம் காண்கிறோம். இந்த மனிதாபிமான விடுதலையின் தொடர்ச்சியாக பெரும் தண்டனைகளுக்கு ஆளாகியுள்ளவர்களுக்கும் வழக்கு விசாரணைகளுக்கு முகம் கொடுத்துள்ளவர்களுக்கும் விடுதலை விமோசனம் கிட்ட வேண்டும். அப்போது தான் இனங்களுக்கு இடையிலான சந்தேக மனப்பான்மைகள் சீரமைந்து நல்லிணக்கம் முழுமைபெறும் நாடு செழிப்பு றும்- என்றுள்ளது. (ம-20,26)

## முகநூலில்...

கண்டி பல்லேகல, பலகொல்ல பகுதியில் வசிக்கும் 30 வயதுடைய நபரொருவரே இந்தச் சம்பவத்தின் பிரதான சந்தேகநபராகக் கருதப்படுகின்றார் எனவும், அவரால் நடத்தப்படும் ஆன்மிக நிலையத்துக்கு எதிராக முகநூலில் தகவல் வெளியிட்டனர் எனக் கருதப்படும் இருவரே இவ்வாறு சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார். முதலில் இவ்விருவரையும் பிரதான சந்தேகநபர் வீட்டுக்கு அழைத்துச்சென்று, அதன் பின்னர் அம்பிட்டிய பகுதியிலுள்ள காட்டுக்குள் கடத்திச்சென்று சித்திரவதைக்கு உட்படுத்தியுள்ளனர் எனவும், சிலுவையில் வைத்து ஆணி அடிப்பதுபோல, பலகையொன்றில் வைத்து அவர்களுக்கு ஆணி அடிக்கப்பட்டுள்ளது எனவும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது எனவும் அவர் கூறினார்.

ஆன்மிக நிலையத்தை நடத்தி சென்ற பிரதான சந்தேகநபரும், கடத்துவதற்கும், சித்திரவதைக்கு உட்படுத்துவதற்கும் பயன்படுத்தப்பட்ட நபர்களும் தலைமறைவாகியுள்ளனர். அவர்களை கைதுசெய்வதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இச் சம்பவம் தொடர்பில் பலகொல்ல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-44)

## முல்லைத்தீவில்...

வந்த நோயாளி ஒருவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார். அவருக்கு பி.சி.ஆர். சோதனை மேற்கொண்டதில் அவர் கொரோனாத் தொற்றால் ஏற்கனவே பாதிக்கப்பட்டவர் என்பது தெரியவந்தது.

கரடிப்புலவு நெடுங்கேணியைச் சேர்ந்த நபரே (வயது-38) இவ்வாறு உயிரிழந்துள்ளார். அவர் கடந்த சில தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் குருதி மாற்றல் சிகிச்சையை பெற்றுக்கொண்டவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-19)

## வவுனியாவில்...

வவுனியா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட நிலையில் அவருக்குக் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டது. இதையடுத்து வவுனியா மருத்துவமனையில் கொரோனா விடுதியில் சிகிச்சை பெற்று வந்த அவர் சிகிச்சை பயனளிக்காமல் நேற்று உயிரிழந்தார். (ம-18,110)

## கொரோனாவால்...

அறிவித்துள்ளது.

இவர்கள் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு சாவடைந்தவர்களில் 27 ஆண்களும், 12 பெண்களும் உள்ளடங்குகின்றனர். இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 ஆயிரத்து 944ஆக அதிகரித்துள்ளது என்றும் அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ம-22)

## வடக்கில்...

கொள்ளப்பட்ட பி.சி.ஆர். சோதனைகளிலேயே மேற்படி 51 பேரும் தொற்றாளர்களாக அடையாளப்படுத்தப்பட்டனர்.

இதன்படி பலாலி கொரோனா இடைத்தங்கல் நிலையத்தில் 2 பேரும், கோப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 18 பேரும், சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 11 பேரும், பரந்தன் கொரோனா இடைத்தங்கல் நிலையத்தில் 3 பேரும், முல்லைத்தீவு கொரோனா இடைத்தங்கல் நிலையத்தில் ஒருவரும், புதுக்குடியிருப்பு கொரோனா இடைத்தங்கல் நிலையத்தில் 2 பேரும், முல்லைத்தீவில் பிறிதொரு கொரோனா இடைத்தங்கல் நிலையத்தில் ஒருவரும், கே.கே.எஸ் கடற்படை முகாமில் ஒருவரும், முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் ஒருவரும், பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் ஒருவரும், தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் 2 பேரும், வசாவிளான் கொரோனா இடைத்தங்கல் நிலையத்தில் ஒருவரும், யாழ்ப்பாண சிறைச்சாலையில் ஒருவரும், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் 5 பேரும், முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் ஒருவரும் தொற்றாளர்களாக அவதானிக்கப்பட்டுள்ளனர். (ம)

# மயங்கிச் சரிந்து பெண் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 28

முச்சக்கர வண்டியில் பயணித்த பெண்ணொருவர் திடீரென மயக்கமடைந்து உயிரிழந்துள்ளார். நேற்றுமுன்தினம் மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. வேலணையைச் சேர்ந்த வசிகரன் கஜராஜினி (வயது- 32) என்பவரே உயிரிழந்தவர். அவர் நேற்றுமுன்தினம் மாலை வேலணையில் இருந்து சங்கானைக்குச் சுகவனுடன் ஆட்டோவிலுக்குச் சென்ற சமயம் திடீரென மயக்கமடைந்துள்ளார். உடனடியாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டுசென்ற சமயம் அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இலங்கைக்கு எதிராக பட்லர் இடைவிலகல்!

லண்டன், ஜூன் 28
இலங்கைக்கு எதிராக எஞ்சியுள்ள ஆட்டங்களில் இருந்து விலகினார் இங்கிலாந்து அணியின் துணைத் தலைவரான பட்லர்.

இலங்கை அணி இங்கிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகின்றது. இந்த இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது ரி20 ஆட்டத்தில் பட்லர் காயமடைந்தார். இதனால் இரண்டாவது ரி20 ஆட்டத்தில் அவர் விளையாடவில்லை.

தற்போது காயத்தின் வீரியத்தன்மையைக் கருத்தில் கொண்டு பட்லருக்கு ஒருநாள் தொடரில் இருந்து ஓய்வு வழங்கப்பட்டுள்ளது. (ம)



# காலிறுதியில் இத்தாலி ஆஸ்திரியா வெளியே!!

உரோம், ஜூன் 28
யூரோ கிண்ணத் தொடரில் நேற்றுக் காலை இடம்பெற்ற ஆட்டத்தில் ஆஸ்திரியாவை வீழ்த்தி காலிறுதிக்குத் தகுதி பெற்றது இத்தாலி.



முதல் பாதியின் முடிவில் இரு அணிகளாலும் கோல் எதையும் பதிவுசெய்ய முடியவில்லை. இரண்டாவது பாதியின் பெடிரிக்கோ கோலைப் பதிவுசெய்ய இத்தாலி முன்னிலை பெற்றது.

பெசினா 105ஆவது நிமிடத்தில் மற்றொரு கோலைப் பதிவுசெய்ய 2:0 என்று வலுப்பெற்றது இத்தாலி. எனினும் ஆஸ்திரியாவும் விடாப் போராட்டத்தை வெளிப்படுத்தி 114ஆவது நிமிடத்தில் கோலொன் றைப் பதிவுசெய்தது. முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது இத்தாலி. (ம)

## ரி20 உலகக்கிண்ணம் ஒக்ரோபர் மத்தியில்!

சார்ஜா, ஜூன் 28
ரி20 உலகக்கிண்ணத் தொடரை ஒக்டோபர் மாதம் 17ஆம் திகதிமுதல் ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது என்று தகவல்கள் வந்துள்ளன.

கொரோனாத் தொற்றுக் காரணமாக ஐ.பி.எல். ஆட்டங்கள் கைவிடப்பட்டன. செப்ரெம்பர் மாதம் 19ஆம் திகதி முதல் ஒக்டோபர் மாதம் 15ஆம் திகதி வரை மீதமுள்ள ஐ.பி.எல்.

ஆட்டங்கள் ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் ஒக்டோபர் மாதம் 17ஆம் திகதி தொடக்கம் நவம்பர் மாதம் 14ஆம் திகதி வரை ரி20 உலகக்கிண்ணத் தொடர் நடத்தப்படும் என்ற அறிவிப்பு தற்போது வெளிவந்துள்ளது. (ம)



வேலைவாய்ப்பு

விற்பனையாளர் (ஆண். பெண்) காசாளர். பாதுகாப்பு உத்தியோகத்தர். வரவேற்பாளர். உதவியாளர்.

0741 38 3368 dewmasweb.com

காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் ஆறுகால் மடத்தில் 1ம் ஒழுங்கையில் 12 பரப்புக் காணி விற்பனைக்கு. 2 பரப்பாக பிரித்து கொடுக்கப்படும். 1 பரப்பின் விலை 5 இலட்சம் மட்டும். (யாழ் மானிப்பாய் பிரதான வீதியில் இருந்து 100 m தூரம்)

தொடர்பு:
077 468 3354, 077 2880 152, 076 221 2037

## தென்னாபிரிக்காவை நேற்று ஊதித்தள்ளியது மே.தீவுகள்

ஜமைக்கா, ஜூன் 28
தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதலாவது ரி20 ஆட்டத்தில் 161 என்ற இலக்கை வெறும் 15 பந்துப்பரிமாற்றங்களில் எட்டி வெற்றிபெற்றது மேற்கிந்தியத் தீவுகள். நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா அணி 20 பந்துப்பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 160 ஓட்டங்களைப் பெற்றது.

அதிகபட்சமாக வான் டெர் டசன் 56 ஓட்டங்களையும், குயின்டன் டி ஹொக் 37 ஓட்டங்களையும், பவுமா 22 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் அலன், பிராவோ இருவரும் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர். பதிலுக்குக் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 15 பந்துப்பரிமாற்றங்களில் இலக்கை அடைந்து வெற்றிபெற்றது. இவின் லூயிஸ் 35 பந்துகளில் 71 ஓட்டங்களைப் பெற்று இலகுவான வெற்றிக்கு வித்திட்டார். அவரை விட கெய்ல் 32 ஓட்டங்களையும், பிளட்சர் 30 ஓட்டங்களையும் பெற்றனர். (ம)

கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
20
.
02
.
1988



மறைவு
.
26
.
06
.
2021

கடந்த (26.06.2021) சனிக்கிழமை இறைபதமடைந்த எமது நண்பன்

திரு. கிருபாமூர்த்தி சிந்துஜன்

அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இணுவில் நண்பர்கள்.

விளம்பரம்: ads@uthayan.com

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிரைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் ... இல. 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.06.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org